தினமலர்

**பவானிசாகர் அணை நீர்மட்டம் "சற்று' அதிகரிப்பு**

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணையில் நீர்வரத்து சற்று அதிகரித்ததால், கடந்த பத்து நாட்களில் அணையின் நீர்மட்டம் ஐந்து அடி அதிகரித்துள்ளது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த நீர்மட்ட உயரம், 120 அடி. இதில் சகதிகள், 15 அடி கழித்து நீர்பிடிப்பு மொத்த உயரம், 105 அடியாகும். அணையில் இருந்து வெளியே வரும் கீழ்பவானி வாய்க்கால் மூலம் ஈரோடு மாவட்டம் மற்றும் கரூர் மாவட்டத்தின் ஒரு பகுதியை சேர்த்து மொத்தம், இரண்டு லட்சத்து, 7 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறுகிறது. இதேபோல் பவானி ஆற்றில் வெளிவரும் தண்ணீர் கொடிவேரி அணையில் தடுக்கப்பட்டு, தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனப்பகுதிக்கும், பின்னர் பவானி ஆற்றின் வழியாகவே சென்று, காலிங்கராயன் பாசனப்பகுதிகளை சேர்ந்த மொத்தம், 50 ஆயிரம் ஏக்கர் பாசனப்பகுதியை வளமடைய செய்கிறது. தவிர ஈரோடு மாவட்டத்தில் புன்செய்புளியம்பட்டி, சத்தியமங்கலம், கோபி, பவானி உள்ளிட்ட நகராட்சி மற்றும் நூற்றுக்கணக்கான டவுன் பஞ்சாயத்து, பஞ்சாயத்து பகுதிகளின் குடிநீருக்கு ஆதாரமாக விளங்குவது பவானிசாகர் அணையாகும். இந்த அணைக்கு நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாரும் நீர் வரத்தின் ஆதாரங்களாக விளங்குகிறது. தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்ட பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக கேள்விகுறியாக விளங்குறது. காரணம் பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியே ஆகும். கடந்த ஆண்டு. இதே நேரத்தில் பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 64.62 அடியாக இருந்தது. மொத்தம், 8.8 டி.எம்.சி., தண்ணீர் இருந்தது. ஆனால் நேற்று பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 39.34 அடியாக இருந்தது. கடந்த ஆண்டை விட, 40 சதவீதம் குறைவாக இருந்தாலும் கடந்த பத்து நாட்களில் அணையின் நீர்மட்டம் ஐந்து அடி உயர்ந்துள்ளது, விவசாயிகளுக்கு ஆறுதல் அளித்துள்ளது. கடந்த, ஐந்தாம் தேதி பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 33 அடியாக இருந்தது. இதனால் குடிநீர் பிரச்னை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. இந்த நிலையில் அணையின் நீர்மட்டம், ஐந்து அடி உயர்ந்துள்ளதால் ஓரளவு குடிநீர் பிரச்னையை சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

**இயற்கை உணவு முறைகள்: பசுமை அங்காடியில் விளக்கம்**

ஈரோடு: ஈரோடு, எஸ்.கே.சி., ரோட்டில் எம்.எல்.ஏ., அலுவலகம் எதிரே உள்ள பசுமை அங்காடி சார்பில், இயற்கை உணவு முறைகள் குறித்த செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த பசுமை அங்காடியில், ரசாயன உரம் இன்றி, இயற்கை விவசாயத்தில் விளைந்த உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இயற்கை வேளாண்மை, இயற்கை உணவு பொருட்கள் குறித்த பொதுமக்களிடம் விழிப்புணர்வு மேற்கொள்கின்றனர். பசுமை அங்காடி சார்பில் நேற்று, இயற்கை

உணவு முறைகள் பற்றிய செயல் விளக்கமும், இயற்கை உணவு குறித்த பொதுமக்களின் சந்தேகத்துக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. புதுச்சேரி "எனர்ஜி ஹோம்' டாக்டர் மாணிக்கம் பங்கேற்று, இயற்கை உணவு குறித்து விளக்கம் அளித்தார். நவமூலிகை ஜூஸ் வகைகள் குறித்தும், அதன் பயன்கள் குறித்தும், மூலிகை இட்லி, பீட்ரூட், மாங்காய், இஞ்சி, வாழைப்பூ, கேரட், ஸ்வீட், கறிவேப்பிலை, புதினா, வெஜிடெபிள் உள்பட, 60 வகையான இட்லி வகைகள் குறித்தும், அதன் பயன்கள் குறித்தும் தெரிவித்தார். மேலும் அவர் பேசியதாவது: காலை உணவாக, பழம், மூலிகை, இளநீர், பழக்கலவை, பசும்காய்களின் சாறினை பருக வேண்டும். வரகு அரிசி, கைக்குத்தல் அரிசி, கம்பங்கூழ், கொள்ளு அவல் ஆகிய கஞ்சி வகையும், சாமை, ராகி கூழும் சாப்பிடுவது, உடலுக்கு ஆரோக்கியம் தரும். மதிய நேரத்தில், அவல் உணவுடன், பசுங்காய்கள் கலவை, கீரை துவையல் பொடி, தேங்காய் துருவல் கலந்து சாப்பிட வேண்டும். இரவு நேரத்தில், கோதுமை, கம்பு, ராகி உப்புமா வகையும், ராகி சோளம், வரகு அவல் உப்புமா, ராகி தோசை, மக்காச்சோளம் ரவை உப்புமாவை சாப்பிடுவது நல்லது. இரவு நேரத்தில் படுக்கும் முன், பழச்சாறுடன் தேன் அல்லது, சுத்தமான நீரில் தேன் கலந்து பருக வேண்டும். இரவு உணவு சாப்பிட்டு, மூன்று மணி நேரத்துக்கு பின் உறங்க வேண்டும். முளையிட்ட பயிறு வகைகள், கொட்டை பருப்புகள், உலர்ந்த பழங்கள், இயற்கை விவசாயத்தில் தயாரித்த இயற்கை வெல்லம், கொல்லிமலைத்தேன் வகையை உணவில் கலந்து, மூன்று மாதம் பயன்படுத்தினால், உடலில் உள்ள அனைத்து நோயும் நம்மை விட்டு நீங்கும், என்றார். ஏற்பாடுகளை பசுமை அங்காடி நிர்வாகி ஜெகதீசன் செய்திருந்தார். விளக்க முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும், இயற்கை உணவுகள் வழங்கப்பட்டது.

**தண்ணீர் பற்றாக்குறையால் பயிர் சாகுபடி பாதிப்பு!**

நாமக்கல்: "டெல்டா மாவட்டம் போல், வறட்சி மாவட்டங்களாக அறிவித்துள்ள மற்ற மாவட்டங்களுக்கும், உரிய இழப்பீடு தரவேண்டும்' என, தமிழக அரசுக்கு, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பருவமழை பொய்த்ததால், நாமக்கல் மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. அதனால், மானாவாரி பயிர்களான சோளம், கம்பு, கடலை போன்ற பயிர்கள், இந்த ஆண்டு சாகுபடி பரப்பளவு பெருமளவு குறைந்துள்ளது. சொற்ப அளவிலேயே, பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கிணற்று நீர் மற்றும் காவிரி பாசன பகுதியான, ராஜா, குமாரபாளையம், மோகனூர் வாய்க்காலை நம்பியும், சாகுபடி செய்துள்ள நெல், கரும்பு, வாழை, வெற்றிலை கொடிக்கால் பயிர்கள், தண்ணீர் பற்றாக்குறையாலும், போதிய மழையின்மை காரணமாகவும், கடும் பாதிப்பு அடைந்துள்ளன. அவற்றை கருத்தில் கொண்டு, டெல்டா மாவட்டங்களை போல், மற்ற மாவட்டங்களில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, உரிய இழப்பீடு வழங்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மோகனூர் வாய்க்கால் பாசனதாரர் சபையின் செயலாளர் அஜிதன் கூறியதாவது: மோகனூர் வாய்க்காலில், 70 நாட்களுக்கும் மேலாக, தண்ணீர் பாசனம் இன்றி, பேட்டப்பாளையம், மோகனூர், குமாரிபாளையம், ஒருவந்தூர் ஆகிய கிராமங்களில், பயிர் செய்யப்பட்டுள்ள நெல், வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால் போன்ற பயிர்கள், பகல் நேரத்தில் அடிக்கும் அதிக வெப்பநிலை காரணமாக, பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அதிக அளவு சாகுபடி செலவு ஏற்படக்கூடிய வெற்றிலை கொடிக்கால், வாழை, கரும்பு பயிர்கள் இழப்பீடு முறையாக கணக்கீடு செய்ய, மாவட்ட நிர்வாகத்துக்கும், தமிழக அரசுக்கும், கோரிக்கை விடுப்பட்டுள்ளது. பலமுறை வேண்டுகோள் விடுத்தும், மோகனூர் வாய்க்காலில், இரண்டு மாதத்துக்கும் மேலாக தண்ணீர் கிடைக்காததால், வாய்க்காலை நம்பி பயிர் செய்துள்ள பயிர்கள், மகசூல் இழப்பு ஏற்படும் நிலை உள்ளது. இது தொடர்பாக, பொதுப்பணித்துறையினர் பதில் ஏதும் கூறாமல், மவுனம் காத்து வருகின்றனர். அதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகள், வறட்சியின் காரணமாக, அரசு, தங்களுக்கும் இழப்பீடு தர வேண்டும் என, கோரிக்கை விடுத்துள்ளனர். வேளாண், வருவாய் துறையினர் இணைந்து, பயிர் இழப்பீடு குறித்து, சரியான ஆய்வு மேற்கொண்டு, தமிழக அரசின் கவனத்துக்கு எடுத்துச் சென்று, உரிய இழப்பீடு பெற்றுத்தர வேண்டும். அதே நேரத்தில், காவிரிலும், வாய்க்காலிலும் அடுத்த மூன்று மாதங்களுக்கு தண்ணீர் பெற எந்த சாத்தியமுமம் இல்லாத சூழ்நிலையில், தமிழக அரசு, விவசாயிகளின் பிரச்னையை கனிவோடு பரிசீலித்து, உரிய நிவாரணம் வழங்கும் என, விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**துல்லிய பண்ணையம் குறித்து விவசாயிகளுக்கு நேரடி பயற்சி**

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த நாரைக்கிணறு பிரிவு சாலை செம்மண்காட்டில், நபார்டு வங்கி உதவியுடன், ரெட்ஸ் தொண்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில், 12 உழவர் மன்றங்கள் செயல்பட்டு வருகிறது. இம்மன்றங்களில் உள்ள விவசாயிகளுக்கு, துல்லிய பண்ணையம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி மோளையனூர் கவிஞர் கண்ணதாசன் உழவர் மன்றத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர். அங்கு குறைந்த செலவில் உற்பத்தியை பெருக்கி, லாபம் ஈட்டும் முறையான துல்லிய பண்ணையம் பற்றியும், தண்ணீர் சிக்கனம், உரம். பூச்சி மருந்துகளை குறைத்து, இயற்கை வேளாண் முறையில் உற்பத்தி செய்தல், சொட்டு நீர் பாசனம் போன்ற புதிய தொழில் நுட்பங்களை விவசாயத்தில் புகுத்துதல் போன்ற விபரங்கள் விளக்கப்பட்டது. மேலும், பல்வேறு பழங்கள், தீவன பயிர்கள் மற்றும் மஞ்சள், குச்சிகிழங்கு, உள்ளிட்ட பயிற்களுக்கு, துல்லிய பண்ணையம் மூலம், விவசாயம் செய்யும் முறை, விளை பொருட்களை விற்கும் முறை பற்றி, உழவர் மன்ற நிர்வாகி சாமிக்கண்ணு, விரிவாக எடுத்துக் கூறினார். தொடர்ந்து, ஏத்தாப்பூர் அருகில் உள்ள அபினவம் கிராமத்தில் செயல்பட்டு வரும் வசிஷ்டா உழவர் மன்றத்தில், கிராம வளர்ச்சிக்கு, விவசாயிகள் ஆற்றி வரும் பணிகள் பற்றியும், வெள்ளாடு, நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்தும், உழவர் மன்ற நிர்வாகி ஜெயராமன் விளக்கினார். மாவட்ட நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் பூவராகன், ரெட்ஸ் தொண்டு நிறுவன மேலாளர் தங்கராஜ், உழவர் மன்ற தலைவர் குழந்தைவேல் உள்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

### முந்திரி பழத்திலிருந்து ஜூஸ் தயாரிக்க 3 நாள் பயிற்சி

புதுக்கோட்டை: முந்திரி பழத்திலிருந்து, ஜூஸ் மற்றும் "ஸ்ரப்' தயாரிக்கும் விதம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதென, வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் முடிவுசெய்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் மாவட்ட விவசாயிகளுக்கு நவீன சாகுபடி முறைகள், அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள், பூச்சிகள் தாக்குதலில் இருந்து பயிர்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகள் குறித்து பயிற்சி அளித்து வருகிறது. முந்திரி ஒட்டுக்கன்றுகள் உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகள், முந்திரி பழத்திலிருந்து பதப்படுத்தப்பட்ட மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட ஜூஸ், ஸ்ரப் போன்றவை உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து வேளாண் விஞ்ஞானிகள் மூலம் பயிற்சி அளிக்க முடிவு செய்துள்ளது. இது குறித்து வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் வைரவன் வெளியிட்டுள்ள அறிக்கை: முந்திரி சாகுபடியில், புதுக்கோட்டை மாவட்டம், தமிழக அளவில், இரண்டாவது இடம் வகிக்கிறது. மாவட்டம் முழுவதும், 17 ஆயிரத்து, 300 ஹெக்டேரில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவை பெரும்பாலும் விதைக்கன்றுகள் மூலம் நடவு செய்யப்பட்டவை என்பதால், காய்ப்பு தன்மை மிகவும் குறைவாக உள்ளது. இதன்காரணமாக, ஒரு ஹெக்டேரில், 500 கிலோவுக்கும் குறைவாகவே மகசூல் கிடைக்கிறது. தரமான ஒட்டு

கன்றுகளை உற்பத்தி செய்து, நடவு செய்வதன் மூலம் ஒரு ஹெக்டேரில், 1,500 கிலோ வரை மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மேலும், முந்திரி கொட்டைகளை எடுத்த பின், பழங்களை குப்பையில் கொட்டி அழித்து விடுகின்றனர். தொண்டை கரகரக்கும் என்பதால், முந்திரி பழங்களை சாப்பிட யாரும் விரும்புவதில்லை. முந்திரி பழங்களை, 10 நிமிடம் உப்புநீரில் ஊறவைத்தோ அல்லது நீராவியில் வேகவைத்தோ சாப்பிட்டால், தொண்டை கரகரப்பு ஏற்படுவதில்லை. மேலும் முந்திரி பழங்களை பதப்படுத்தி, அவற்றிலிருந்து முந்திரி ஜூஸ், ஸ்ரப், ஜாம், குவாஸ், ஜெல்லி போன்ற மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்து உபயோகப்படுத்தலாம், விற்பனை செய்யலாம். உற்பத்தி செலவு மிகவும் குறைவு என்பதால், விவசாயிகள் அனைவரும் இவற்றை தயாரிக்கலாம். இதன்மூலம் முந்திரி சாகுபடியில் அதிக வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

இதற்காக, முந்திரியில் ஒட்டு கன்றுகள் உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகள், முந்திரி பழத்திலிருந்து ஜூஸ், ஜெல்லி, ஜாம் போன்றவை தயாரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும், 20ம் தேதி முதல், 22ம் தேதிவரை தொடர்ந்து பயிற்சியளிக்கப்படும். வேளாண் விஞ்ஞானிகள் பயிற்சி அளிக்க உள்ளனர். முந்திரி சாகுபடி செய்துவரும் விவசாயிகள், இதில் பங்கேற்று பயிற்சி பெறலாம்.

**உழவர் மன்ற பயிற்சி முகாம்**

குஜிலியம்பாறை:குஜிலியம்பாறையில், உழவர் மன்ற பிரதிநிதிகளுக்கான, பயிர் சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடந்தது.ஆர்.புதுக்கோட்டை ஊராட்சி தலைவர் பழனிச்சாமி தலைமை வகித்தார். கோட்டாநத்தம் கனரா வங்கி மேலாளர் அருண்மாறன் முன்னிலை வகித்தார். காந்திகிராம வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப உழவியல் வல்லுனர் உதயகுமார், பயிர் சாகுபடி, மரம் வளர்ப்பு, வேளாண் கருவிகள் குறித்து விளக்கினார். பாங்க் ஆப் இந்தியா கள அலுவலர் இம்ரான்கான், கொடைக்கானல் ஊரக மேம்பாட்டு சங்க தலைவர் செல்வேந்திரன், பூஜா பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளை மேலாளர் மகேந்திரன், ரிலையன்ஸ் அறக்கட்டளை மேலாளர் முகில்நிழவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காளன் வளர்ப்பு இலவச பயிற்சி**

திண்டுக்கல்:திண்டுக்கல் கனரா வங்கியின் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சிநிலையத்தில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி மார்ச் 21 முதல் ஆறு நாட்கள் நடக்கிறது. பயிற்சி பெற விரும்புவோர் குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு படித்திருக்கவேண்டும். வயது 18 முதல் 45 க்குள் இருக்கவேண்டும். பயிற்சிக்கு எந்தவித கட்டணமும் இல்லை. பயிற்சி காலத்தில் இலவசமாக உணவு வழங்கப்படும். பயிற்சி பெற்றதற்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது. பயிற்சியில் பங்கேற்க விரும்புபவர்கள், இயக்குனர், கனரா வங்கி ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையம், 83 ஏ, முதல்மாடி, ஜான்பால் வளாகம், நேருஜி நகர், திண்டுக்கல், என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம்.ரேஷன் கார்டு நகல், கல்விச்சான்றிதழ் நகல், இரண்டு பாஸ்போர்ட் அளவு போட்டோ உடன் விண்ணப்பிக்கவேண்டும். மேலும் விபரங்களுக்கு நாகேஷ், இயக்குனர் அவர்களை 74183 45528 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

**நிலக்கடலை நடவு செய்ய தயக்கம் காட்டும் விவசாயிகள்**

கூடலூர்:மழையின்றி நிலக்கடலை நடவுப் பணிகள் துவக்க, விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். கூடலூரில் மானாவாரி விவசாயத்தில், முக்கியமானதாக நிலக்கடலை சாகுபடி இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, நிலக்கடலை அறுவடை செய்வதற்காக, பல்வேறு ஊர்களில் இருந்து, தொழிலாளர்கள் கூடலூருக்கு வந்து தங்கி, அறுவடை பணியில் ஈடுபடுவார்கள். இதற்காக கூடலூரில் இருந்து லோயர்கேம்ப் வரையுள்ள ரோட்டோரங்களில் குடிசை அமைத்து நிலக்கடலையை குவித்து வைத்திருப்பார்கள். தற்போது பருவ மழை தவறி, மானாவாரி விவசாயமான நிலக்கடலை சாகுபடி பரப்பளவு குறையத் துவங்கி விட்டது. இப்பகுதியில் 10 ஆயிரம் ஏக்கரில், சாகுபடி செய்த இவ்விவசாயம், தற்போது, 2 ஆயிரம்

ஏக்கருக்கும் குறைவாகி விட்டது. கோடை மழையை நம்பி நிலக்கடலை பயிரிடப்படும். தற்போது மழை பொய்த்து வருவதால், விவசாயிகள் தயக்கம் காட்டியுள்ளனர்.

**ஆண்டிபட்டியில் தக்காளி விலை வீழ்ச்சிவிவசாயிகள் கலக்கம்**

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி பகுதியில் தக்காளி விலை வீழ்ச்சி அடைந்ததால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.ஆண்டிபட்டி பகுதியில் பாலக்கோம்பை, தெப்பம்பட்டி, ராமகிருஷ்ணாபுரம், சேவாநிலையம், ராஜதானி, அணைக்கரைப்பட்டி, தர்மத்துப்பட்டி, புள்ளிமான் கோம்பை, வெள்ளையத்தேவன்பட்டி உட்பட பல பகுதிகளில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் விளையும் தக்காளி மதுரை மார்க்கெட் பகுதிக்கு அனுப்பப்படும். அங்கிருந்து இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், கேரளாவுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படும்.கடந்த சில நாட்களாக ஆண்டிபட்டி பகுதியில் தக்காளி விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு 15 கிலோ பெட்டி 200 ரூபாய் வரை விலை போனது. தக்காளி விலை தற்போது படிப்படியாக குறைந்து 15 கிலோ பெட்டி 50 ரூபாயாக குறைந்து விட்டது. தற்போது ஆண்டிபட்டி பகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் பெரும்பாலான விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்யவில்லை. விவசாயிகள் கூறியதாவது: ஆண்டிபட்டி பகுதியில் தற்போது குறைவான அளவே சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறைந்த அளவு விளைச்சல் இருந்தாலும் மார்க்கெட்டில் தக்காளிக்கு மவுசு இல்லை. வெளியூர் வியாபாரிகள் யாரும் வராததால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலையில் தக்காளியை செடியில் பறிப்பதற்கு கொடுக்கும் கூலி அளவு கூட விலை கிடைக்கவில்லை. வறட்சி, விளைச்சல் குறைவு, விலை சரிவால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர், என்றனர்.

**வறட்சியை தாங்கும் பயிர்களை விளைவிக்க விவசாயிகளுக்கு யோசனை**

காரைக்குடி:நார்ச்சத்து அதிகம் உள்ள சிறு தானியங்கள், வறட்சியை தாங்கும் பயிர்களை விவசாயிகள் விளைவிக்க முன் வர வேண்டும், என மதுரை வேளாண் கல்லூரி,ஆராய்ச்சி நிலைய முதல்வர் சுப.சுந்தரம் தெரிவித்தார்.காரைக்குடி செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலையத்தில்,சிறு, குறு தானியங்கள், மாறி வரும் பருவ நிலைக்கு ஏற்ப மாற்றுபயிர் குறித்த பயிற்சி அட்மா திட்டத்தின் கீழ் நடந்தது.அவர் பேசியதாவது: தமிழகம் முழுவதும் ஆண்டுக்கு, 2.21 மில்லியன் ஹெக்டேரில் நெல் விளைவிக்கப்படுகிறது. இந்த ஆண்டு மழையின்மையால், 40 சதவீத அளவுக்கே விளைந்துள்ளது. சமீப காலமாக, வெப்பநிலை உயர்வு, பருவமழை பொய்த்தல், நீர்தட்டுப்பாடு போன்ற காரணங்களால்,விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. வறட்சியை தாங்கி குறைந்த அளவு தண்ணீரில், குறுகிய காலத்தில் மகசூல் தரும், சிறுதானிய பயிர்களான குதிரைவாலி, வரகு, பனிவரகு, தினை, சாமை உட்பட பாரம்பரிய பயிர்களை பயிரிட விவசாயிகள் முன் வர வேண்டும். இத்தானியங்களில், ஆரோக்கிய உணவுக்கான தாதுப்பொருட்கள்,நார்சத்து, வைட்டமின்கள் அதிக அளவில் உள்ளன, என்றார். நிகழ்ச்சியில்

பேராசிரியர் பார்வதி, ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் சுவாமிநாதன், கண்ணன், பரமசிவன், ஷடா கவிதா, துணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி, வேளாண் உதவி இயக்குனர் மணிவண்ணன் உட்பட பலர் பேசினர்.

**சாத்தூரில் வறட்சி நிவாரண உ யர் மட்டக்குழு ஆய்வு**

சாத்தூர்:விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர் பகுதியில் வறட்சி நிவாரண உயர் மட்டக்குழு ஆய்வு செய்தது. சாத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட நள்ளி, பெரிய ஓடைப்பட்டி, சின்னஓடைப்பட்டி கிராமங்களில் உள்ள மானாவாரி விவசாயநிலங்களை நேற்று மதியம் 3.30 மணிக்கு அமைச்சர் ஒ.பன்னீர்செல்வம் தலைமையில் குழுவினர் ஆய்வு செய்தனர். இதில் அமைச்சர்கள் நத்தம்விஸ்வநாதன் முனுசாமி, வைத்திலிங்கம் , தாமோதரன், வெங்கடாசலம், ராஜேந்திரபாலாஜி, வைகைச்செல்வன், எம்.எல்.ஏ.,க் கள் உதயகுமார், கோபால்சாமி, அதிகாரிகள் மற்றும் கலெக்டர் ஹரிஹரன் ஆகியோர் பங்கேற்றனர். மானாவாரியில் பயிரிட்டு கருகிய கம்பு, மக்காச்சோளம் பயிர்களை பார்வையிட்டனர். இக் குழுவிடம் விவசாயிகள் கூறுகையில்,"ஏக்கருக்கு ரூபாய் 30 ஆயிரம் வரை கடன்வாங்கி செலவிட்டுள்ளோம். இழப்பீடு தொகையாக ஏக்கருக்கு 25 ஆயிரமும், விவசாய கூலி தொழிலாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். கண்மாய்கள் மற்றும் வரத்துக்கால்வாய்களை தூர்வாரி பாசன வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென,' கோரிக்கை விடுத்தனர். போக்குவரத்து நிறுத்தம் மக்களுக்கு பாதிப்பு சாத்தூர் நள்ளி கிராமத்திற்கு அமைச்சர்கள் குழு ஆய்வுக்காக 2மணிக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. 3.15 மணிக்கு தான் அமைச்சர் குழுவினர் நள்ளிக்கு தாமதமாக வந்தனர். மதியம் 2.30 மணிக்கே வாகனங்களை நிறுத்தி விட்டனர். இதனால் அரைமணி நேரத்திற்கும் மேலாக நான்கு வழிச்சாலையில் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்றன. போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் மக்கள் சிரமத்திற்குள்ளாகினர்.

**மானூர் வட்டார விவசாயிகள் தோட்டக்கலை கல்வி சுற்றுலா**

திருநெல்வேலி:மானூர் வட்டார விவசாயிகள் அட்மா திட்டத்தின் கீழ் தோட்டக்கலை கல்விச் சுற்றுலா சென்றனர். மானூர் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் தோட்டக் கலை கல்விச் சுற்றுலாவாக கிள்ளிகுளம், ஏர்வாடி, கன்னியாகுமரி, தோவாளை ஆகிய பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஏர்வாடி டி.வி.எஸ்.பண்ணையை பார்வையிட்டனர். பண்ணை மேலாளர் சாகுல்ஹமீது, தோட்டக் கலைத்துறை சார்பில் பயிரிடப்பட்டுள்ள மா, நெல்லி, கொய்யா ரகங்கள் குறித்தும், சாகுபடி குறித்தும் விளக்கினார். தோவாளை மலர் ஆராய்ச்சி மையம் சென்று மலர் சாகுபடி குறித்து விபரங்களை கேட்டறிந்தனர். பேராசிரியர் நயினார், மலர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். டாலியா, அரளி, ரோஜா, மல்லிகை, கனகாம்பரம், பிச்சி ஆகிய பூக்களை பயிரிட்டு அதிக லாபம் அடைவது குறித்து விளக்கினார். கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரம் சென்ற விவசாயிகள் அஸோலா சாகுபடி குறித்தும், காய்கறி பயிர்கள் சாகுபடி குறித்தும்

மேலாளர் சரஸ்வதியிடம் கேட்டறிந்தனர்.
கல்விச் சுற்றுலாவை மானுார் உதவி இயக்குனர் சரஸ்வதி மேற்பார்வையில் தோட்டக்கலை உதவி அலுவலர் வினட், தொழில் நுட்ப மேலாளர் காட்வின், தொழில் நுட்ப சிறப்பறிஞர்கள் இசக்கி, சகுந்தலா தேவி வழிநடத்தினர்.

**கோவில்பட்டியில் விவசாயிகளுக்கு பயிற்சி**

கோவில்பட்டி: கோவில்பட்டியில் சிறுதானியங்களை ஊக்குவித்து விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது.தமிழக அரசின் சார்பில் வேளாண்மைத்துறை வழியாக சிறுதானிய ஊக்குவிப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதில் தற்போதைய உணவு பழக்கத்தில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்பட பொதுமக்கள் அனைவருக்கும் ஊட்டச்சத்து குறைபாடுகள் காணப்படுகிறது. இதை தடுக்க இத்திட்டத்தின் சார்பில் கோவில்பட்டி, கயத்தாறு, விளாத்திகுளம், புதூர் மற்றும் ஓட்டப்பிடாரம் ஆகிய வட்டாரங்களில் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது.
இதனடிப்படையில் சிறுதானிய விழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும் உணவு விழா நடந்தது. தொடர்ந்து விவசாயிகளுக்கு சிறுதானியங்கள் குறித்தும், அதிலுள்ள சத்துக்கள் குறித்தும், அதிலிருந்து தயாரிக்கப்படும் சத்துள்ள உணவுகள் குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்பட்டது.
இதற்கான துவக்க விழாவிற்கு கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் ஜவஹர் தலைமை வகித்தார். கோவில்பட்டி யூனியன் சேர்மன் பேச்சியம்மாள் தங்கப்பாண்டியன் முன்னிலை வகித்து துவக்கி வைத்தார். கோவில்பட்டி உதவி வேளாண்மை இயக்குநர் கருப்பசாமி வரவேற்றார். தொடர்ந்து தூத்துக்குடி உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் குருமூர்த்தி திட்டம் குறித்து பேசினார். இதையடுத்து ஸ்காட் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தொழில் நுட்ப வல்லுநர் சுமதி ஊட்டச்சத்து குறைபாடு குறித்தும், அதை நிவர்த்தி செய்யும் சிறுதானிய உணவுகளின் முக்கியத்துவம் குறித்தும் பேசினார்.
இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் கம்பு சாகுபடியை ஊக்குவிக்கும் விதத்தில் வீரிய ஒட்டு விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் ஹெக்டேருக்கு சுமார் ரூ.3 ஆயிரம் வீதம் மானியம் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் கோவில்பட்டி, கயத்தாறு, விளாத்திகுளம், புதூர், ஓட்டப்பிடாரம் ஆகிய வட்டாரங்களை சேர்ந்த சுமார் 50 விவசாயிகள் கலந்து கொண்டனர்.
ஏற்பாடுகளை கோவில்பட்டி வேளாண்மை அலுவலர் பாலமுருகன், துணை அலுவலர் மாசாணன் ஆகியோர் செய்திருந்தனர்.

**கருகும் தேயிலை செடிகள் : வறட்சி எதிரொலி**

வால்பாறை:வால்பாறையில் நிலவும் வறட்சியினால் தேயிலை செடிகள் கருகின.
பருவ மழை ஏமாற்றியதால் வால்பாறையில் இந்த ஆண்டு துவக்கம் முதலே கடும் வறட்சி ஏற்பட்டது. தேயிலை செடிக்கு போதிய தண்ணீர் இல்லாத நிலையில், தண்ணீர் தெளிப்பான் மூலம் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றப்பட்டது. தொடர்ந்து வறட்சி நிலவுவதாலும், அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் பொழியும் கடும் பனிப்பொழிவாலும் தேயிலை செடிகள்

கருகத்துவங்கியுள்ளன. இதனால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதோடு, தற்காலிக தொழிலாளர்களும் வேலை இழந்துள்ளனர். இது குறித்து தேயிலை விவசாயிகளிடம் கேட்ட போது,"சிதோஷ்ண நிலை மாற்றத்தால் தற்போது வால்பாறையில் கடும் பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. இதனால் சில இடங்களில் மட்டும் தேயிலை செடிகள் கருகியுள்ளன. மீண்டும் பருவ மழை பெய்தால், தேயிலைக்கு போதிய நீர்கிடைக்க வாய்ப்புள்ளது' என்றனர்.

**குறைந்து வரும் வெங்காய சாகுபடி பரப்பு: மழை குறைவு எதிரொலி**

உடுமலை:உடுமலை பகுதியில், பல்வேறு காரணங்களால், வெங்காய சாகுபடி பரப்பு ஆண்டுதோறும் வெகுவாக குறைந்து வருகிறது. உடுமலை, பல்லடம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் சின்னவெங்காயம் பல ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டு வந்தது. இரண்டு சீசன்களில் மட்டும் பயிரிடப்பட்டு வந்த சின்ன வெங்காய சாகுபடி வீரிய ரக விதை நடவால் ஆண்டில் ஏழு மாதங்கள் பயிரிடப்பட்டது. வீரிய ரக விதைகள் 70 நாட்களில் அறுவடைக்கு தயார் ஆவதால் சாகுபடி பரப்பு அதிகரித்து வந்தது. பி.ஏ.பி., மண்டல பாசனம் மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு உடுமலை பகுதி விவசாயிகள் வெங்காயம் பயிரிட ஆர்வம் காட்டினர். இந்நிலையில், கடந்தாண்டு பருவமழை போதுமான அளவு பெய்யாததால், உடுமலை பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக பாதிக்கப்பட்டது. இதனால், அதிக தண்ணீர் தேவையுள்ள வெங்காய சாகுபடியை விவசாயிகள் பயிரிட முடியவில்லை. விதை தட்டுப்பாடு, தொழிலாளர் பற்றாக்குறை, நிலத்தடி நீர் மட்டம் சரிவு போன்ற காரணங்களால், ஆண்டுதோறும் வெங்காய சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது.

விவசாயிகள் கூறியதாவது:

பருவமழை பெய்யாமல் வெயில் கொளுத்தியதால் நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்பட்டு வெங்காயம் பயிரிடப முடியவில்லை. பல்வேறு காரணங்களால், ஏக்கருக்கு சராசரியாக 6 முதல் 8 டன் வரை கிடைத்த விளைச்சல் 5 டன்னுக்கும் கீழே குறைந்துள்ளது. வெங்காய விதைகளுக்கு நடவு பணிகளின் போது போலியாக தட்டுப்பாடு ஏற்படுத்தி விலையை பல மடங்கு உயர்த்துகின்றனர். இத்தகைய பிரச்னைகளுக்கு தோட்டக்கலைத்துறை போதிய நடவடிக்கை எடுப்பதில்லை. இதனால், வெங்காய சாகுபடி பரப்பு குறைந்து பிற காய்கறி பயிர்கள் அதிகளவு பயிரிடப்படுகிறது.

இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

**கடலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 48 டன் வேர்க்கடலை விற்பனைக்கு வந்தன**

முதுநகர்:கடலூர் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 48 டன் வேர்க்கடலை விற்பனைக்கு வந்தன. கடலூர், ஆலப்பாக்கம், சேடப்பாளையம், ராமாபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் 2,000 எக்டேர் நிலப்பரப்பில் மணிலா பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது மணிலா பயிர்கள் அறுவடை காலம் முடிந்து விற்பனைக்கு வர துவங்கியுள்ளது. கடலூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் கடந்த ஒரு வாரமாக வேர்க்கடலை விற்பனைக்கு வரத் துவங்கியுள்ளது. நேற்று மட்டும் அதிகபட்சமாக 48 டன் அளவிற்கு வேர்க்கடலை விற்பனைக்கு வந்தன. கடந்த வாரம் நிலவிய விலையை விட தற்போது விலை கணிசமாக குறைந்து காணப்படுகிறது. வேர்க்கடலை அதிகரித்து இருப்பதும் விலை குறைவுக்கு காரணமாக உள்ளது. தற்போது அறுவடை நடந்து வரும் நிலையில் வரும் நாட்களில் அதிக அளவில் வரத்து இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ரூ.3.81 கோடிக்கு காய்கறி வர்த்தகம்**

திருப்பூர்: திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த பிப்., மாதம் 1,892 டன் காய்கறி வரத்து இருந்தது; 3.81 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்துள்ளது.பெருமாநல்லூர், தெக்கலூர், நம்பியூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், திருப்பூர் வடக்கு உழவர் சந்தைக்கு காய்கறி கொண்டு வருகின்றனர். நாளொன்றுக்கு 70 டன் வரை காய்கறி வரத்து இருக்கும். பருவ மழையின்றி, வறட்சி ஏற்பட்டுள்ளதால், காய்கறி சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. இதனால், கடந்த ஜன., முதல், சந்தைக்கு வரத்தும் படிப்படியாக குறைந்து வருகிறது. கடந்த ஜன., மாதம் 2,096 டன்னாக இருந்த வரத்து, பிப்., மாதம் 204 கிலோ அளவு குறைந்துள்ளது. கடந்த பிப்., மாதம் மொத்தம் 5,258 விவசாயிகள், 1,892 டன் காய்கறி விற்பனைக்கு கொண்டு வந்துள்ளனர். நாளொன்றுக்கு 13.6 லட்சம் வீதம், 3.81 கோடிக்கு வர்த்தகம் நடந்துள்ளது. 645 விவசாயிகள், 5.19 லட்சம் ரூபாய் மதிப்பிலான 25.9 டன் காய்கறிகளை குளிர்பதன கிடங்கில் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், ""பருவ மழையின்றி வறட்சி ஏற்பட்டுள்ளதால், சந்தைக்கு காய்கறி வரத்து, படிப்படியாக குறைந்து வருகிறது. வெண்டை, கத்தரி, பாகல் உள்ளிட்ட அனைத்து காய்கள் வரத்தும் குறைந்துள்ளது. தக்காளி வரத்து மட்டும் இரண்டு டன்னில் இருந்து ஐந்து டன்னாக அதிகரித்துள்ளது. தக்காளி விலை மட்டும் கிலோ மூன்று ரூபாயாக குறைந்துள்ளது; மற்ற காய்கறிகள் விலை, கிலோவுக்கு 10 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. இம்மாதம், காய்கறி வரத்து மேலும் குறைந்து வருகிறது,'' என்றார்.

**உளுந்து பயிரில் மஞ்சள் நோய் கட்டுப்படுத்த ஆலோசனை**

வடலூர்:குறிஞ்சிப்பாடி பகுதியில் உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து குறிஞ்சிப்பாடி வேளாண்மை உதவி இயக்குனர் அப்பன்ராஜ் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் விளைந்துள்ள உளுந்து பயிரில் சில இடங்களில் மஞ்சள் தேமல் நோய் காணப்படுகிறது. வயலில் சில செடிகளில் இலைகள் மஞ்சள் நிறமாக மாறத் தொடங்கும். இந்த நோய் வைரஸ் தாக்குதல். ஆனால் இது பூச்சியின் மூலம் பரவுவதால், முதலில் நோய் பரப்பும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். கோடையில் இந்நோய் அதிகம் பரவும் தன்மை கொண்டது. எனவே, உளுந்து பயிரிட்டுள்ள விவசாயிகள் கவனமாக கண்காணித்து நோயின் அறிகுறிகள் தென்பட்டதும் மருந்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். முழுமையாக தாக்கப்பட்டச் செடிகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து பிடுங்கி விட்டால் மேற்கொண்டு பரவாமல் தடுக்கலாம்.

நோய் அறிகுறி தென்பட்டவுடன் ஒரு எக்டருக்கு மானோகுரோட்டோபாஸ் 500 மில்லி மருந்தினை 500 லிட்டர் நீரில் கலந்து தெளித்து பரவாமல் கட்டுப்படுத்தலாம்.

**தினமணி**

திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளில் அமைச்சர்கள் குழு ஆய்வு

திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளை, தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சர்கள் குழுவினர் சனிக்கிழமை ஆய்வு செய்தனர்.

தமிழகத்தில் சென்னை தவிர பிற மாவட்டங்களை, வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்த முதல்வர் ஜெயலலிதா, விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதியாக ரூ. 15 ஆயிரம் வழங்கப்படும் என அறிவித்தார்.

மேலும் வறட்சி பாதித்த பல்வேறு பகுதிகளில் அமைச்சர்கள் அடங்கிய குழு பார்வையிடும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையில், அமைச்சர்கள் குழு அண்மையில் டெல்டா மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டது.

இந்த நிலையில், திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளைப் பார்வையிடுவதற்காக அக் குழுவினர் சனிக்கிழமை திண்டுக்கல் வந்தனர்.

இதில், மின் துறை அமைச்சர் நத்தம் இரா. விசுவநாதன், உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.பி. முனுசாமி, வீட்டு வசதித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம், வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ். தாமோதரன், வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் ஆகிய அமைச்சர்கள் இக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

கூடுதல் தலைமை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் டி.எஸ். ஸ்ரீதர், வருவாய்த் துறை முதன்மைச் செயலர் ராஜீவ் ரஞ்சன், ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் சி.வி. சங்கர், தோட்டக் கலைத் துறைச் செயலர், வேளாண்மை இயக்குநர் எம். ராஜேந்திரன், கால்நடை பராமரிப்புத் துறை ஆணையர் பழனிச்சாமி உள்ளிட்ட அதிகாரிகளும் இக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

ஆத்தூர் பகுதியில் பாதிக்கப்பட்ட நெற் பயிர்களை அமைச்சர்கள் பார்வையிட்டு, விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டனர்.

அதன் பின்னர், ரெட்டியார்சத்திரம் பகுதிகளில் சோளம் பயிரிட்டு, போதிய மழை இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளிடமும் விசாரணை நடத்தினர். அப்போது அமைச்சர்கள் கூறுகையில், வறட்சி மற்றும் பாதிப்பு விவரங்களை முதல்வரிடம் தெரிவித்து, உரிய நிவாரணம் கிடைக்க வழிவகை செய்வதாக உறுதி அளித்தனர்.

பின்னர், ஆட்சியர் ந.வெங்கடாசலம், மாவட்டம் முழுவதும் வறட்சி பாதிப்பு குறித்த புள்ளிவிவரங்களை அமைச்சர்கள் குழுவிடம் வழங்கினார்.

அதன் விவரம் (ஏக்கரில்) வருமாறு: நெற்பயிர் - 5,925, பயிர் வகைகள் - 34,158, சிறு தானியங்கள் - 1.04 லட்சம், எண்ணெய் வித்துகள் - 8,578, கரும்பு - 758, பருத்தி - 1,167 ஆக மொத்தம் 1.55 லட்சம் ஏக்கர் பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் தெரிவித்தார்.

### பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு முழு நிவாரணம்: கருணாநிதி

விவசாயிகளுக்கான முழு நிவாரணத்தை நிதிநிலை அறிக்கையிலாவது வழங்க வேண்டும் என்று திமுக தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

50 சதவீதத்துக்கு மேல் மகசூல் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதம் வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் அறிவித்தார்.

50 சதவீதத்துக்கும் குறைவாக மகசூல் பாதிக்கப்பட்டவர்களின் நிலை என்று தெரியவில்லை.

டெல்டா மாவட்டங்களைத் தவிர்த்த மற்ற மாவட்டங்களுக்கு குழு அனுப்பி, ஆய்வு செய்து, நிவாரணம் பற்றி முடிவு செய்யப்படும் என்று அறிவித்தார். அந்தக் குழுவின் நிலை என்ன?

பயிர் பாதிப்பு பற்றிய கணக்கெடுப்பு நடத்தியதில் குளறுபடி என்று தெரிவித்து மறு கணக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று தொடர்ந்து விவசாயிகள் கோரி வருகின்றனர். அதன் நிலை என்ன?

இது எதற்கும் அரசினர் இதுவரை பதில் கூறவில்லை.

நிவாரணம் அளித்ததை கம்யூனிஸ்ட் கட்சிகள் பேரவையில் வரவேற்றதாக தஞ்சையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் ஜெயலலிதா பேசினார்.

ஆனால் திருவாரூர் மாவட்டம் முழுவதும் மத்திய, மாநில அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினரும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினரும்தான் போராடி வருகின்றனர்.

விவசாயிகள் எதிர்பார்த்ததற்கு மாறாக, முதல்வர் அறிவித்த குறைவான நிவாரணம் கூட, முறையாக வழங்கப்படாமல் அதில் பெரும் குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன. விவசாயிகள் தொடர்ந்து அரசுக்கு வைத்து வரும் கோரிக்கைகள் எதையும் ஜெயலலிதா பரிசீலித்து உரிய முடிவுகள் எடுக்காத காரணத்தினால் தமிழகத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

எனவே, பெரும் துன்பத்துக்கு ஆளாகியிருக்கும் தமிழக விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு விரைவில் வெளிவர உள்ள நிதி நிலை அறிக்கையிலாவது முழு அளவிலான நிவாரணங்களை மேலும் காலம் தாழ்த்தாமல் வழங்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## வேளாண் கடன் தள்ளுபடியில் முறைகேடு நடந்ததற்கு ஆதாரம் உள்ளது: ஹசாரே

வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தில் முறைகேடு நடந்ததற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன என சமூக ஆர்வலர் அண்ணா ஹசாரே தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது:

மத்திய அரசின் வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தில் முறைகேடுகள் நடந்துள்ளன. அதற்குப் போதிய ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. மாநில அரசு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினால், அவற்றை ஒப்படைக்கத் தயார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் வறட்சி நிலவுவதற்கு இயற்கைப் பேரிடர் காரணமல்ல. மனித தவறுகள்தான் காரணம். நீராதாரங்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுரண்டி விட்டோம். நீர் மற்றும் மண் அறிவியல் சார்ந்த முறைகளைப் பின்பற்றவில்லை. அதன் விளைவுகளை இப்போது பார்க்கிறோம்.

ராகுல் காந்தியாக இருந்தாலும் சரி, நரேந்திர மோடியாக இருந்தாலும் சரி நாட்டின் பிரச்னைகளை அவர்கள் இருவராலும் தீர்க்க முடியாது. லோக் ஆயுக்த நியமனத்துக்கு எதிராக மோடி அரசு வழக்குத் தொடுத்தது ஏன் என்று ஹசாரே கேள்வி எழுப்பினார். ரூ.52 ஆயிரம் கோடி மதிப்பிலான கடன் தள்ளுபடி திட்டத்தில் தகுதியற்றவர்களும் பயனடைந்திருக்கின்றனர், முறைகேடு நடைபெற்றுள்ளது என தலைமை கணக்குத் தணிக்கையாளர் (சிஏஜி) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## 250 ஆழ்துளை கிணறுகள் அமைக்க முந்திரி விவசாயிகளுக்கு நிதி

கடலூர் மாவட்டத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு 250 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் கடந்த 2011-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் தேதி வீசிய தானே புயலில் 30 ஆயிரம் ஹெக்டேர் முந்திரி மரங்கள் பாதிக்கப்பட்டன.

இதில் முழுமையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, வீரிய ரக முந்திரிக் கன்றுகள் இலவசமாக வழங்கப்படுவதோடு, ஆழ்துளைக் கிணறும், மின் இணைப்புடன் மின்மோட்டாரும் மானியத்தில் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது.

தமிழக அரசின் அறிவிப்பை நம்பி கடலூர் மாவட்டத்தில் 1,180 ஹெக்டேர் முந்திரி மரங்களை விவசாயிகள் முழுமையாக வெட்டி அகற்றினர்.

அவர்களுக்கு முந்திரிக் கன்றுகளை இலவசமாக வழங்கும் பணியை தோட்டக்கலைத் துறையினர் தொடங்கினர்.

ஆனால் அரசின் சார்பில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படாததால், முந்திரிக்கன்றுகளை வாங்க விவசாயிகள் முன்வரவில்லை.

இந்நிலையில் முந்திரி விவசாயிகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுப்பதற்கான ஆணையை தமிழக அரசு வியாழக்கிழமை வெளியிட்டுள்ளது.

இதன்படி கடலூர் மாவட்டத்தில் 50 முந்திரி விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கும், 200 தனிநபர்களுக்கும், விழுப்புரம் மாவட்டத்தில் 10 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கும், 10 தனிநபர்களுக்கும் ஆழ்துளைக் கிணறுகளும், மின்இணைப்புடன் கூடிய மின்மோட்டார்களும் மானியத்தில் வழங்கப்படும்.

இதில் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு 75 சதவீத மானியமும், தனிநபர்களுக்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படும்.

இதற்காக ரூ.11.46 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் நடப்பு நிதி ஆண்டுக்கு (அதாவது இந்த மாதத்துக்கு மட்டும்) மட்டும் ரூ.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதி தொகை அடுத்த நிதி ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 18-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் மார்ச் 18-ம் தேதி மதியம் 3 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் விவசாயிகள் அனைவரும் பங்கேற்று விவசாயம் தொடர்பான மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கலாம் என்று ஆட்சியர் லி. சித்ரசேனன் தெரிவித்துள்ளார்.

### மரம் வளர்ப்பு விழிப்புணர்வு முகாம்

விழுப்புரம் வனவியல் விரிவாக்க கோட்டம் மூலம் தமிழ்நாடு உயிர்பாண்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின்கீழ் தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல் குறித்த விழிப்புணர்வு முகாம் மற்றும் நாடகம், உளுந்தூர்பேட்டை அருகே அயன்வேலூரில் அண்மையில் நடைபெற்றது.

ஊராட்சி மன்றத்தலைவர் எஸ்.கே.ரங்கராமானுஜம் தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் வீரப்பன் முன்னிலை வகித்தார்.

விழுப்புரம் வனவியல் விரிவாக்க கோட்ட அலுவலர் ஏழுமலை கலந்துகொண்டு திட்டத்தின் பயன்கள் குறித்து மக்களிடையே விளக்கிக் கூறினார். முகாமில் மரம் நடுதலின் அவசியம் குறித்து புதுவை மாநில யாத்ரா கலைக்குழுவினர் நாடகம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

முகாமிற்கான ஏற்பாடுகளை கீண்டோ தன்னார்வ தொண்டு நிறுவனர் எஸ்.ஆரோக்கியம்மாள் செய்திருந்தார்.

### குறைந்த நீரில் நெல் சாகுபடி:விவசாயிகளுக்கு விளக்கம்

விழுப்புரத்தில், ஸ்ரீசத்யசாயி சேவா சமிதி சார்பில் விவசாயிகளுக்கான கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

காவலர் சமுதாயக் கூடத்தில் மாவட்ட ஸ்ரீசத்ய சாயி சேவா சமிதி நடைபெற்ற இக் கருத்தரங்கில் சமிதியின் மாவட்டத் தலைவர் எஸ்.சரவணன் வரவேற்றார். மாநில தலைவர் ஜி.வாசுதேவன் துவக்கவுரையாற்றினார்.

குறைந்த நீரில் நெல் சாகுபடி, குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்டுவது குறித்து டி.சுப்பிரமணியன், விதைகள், விதைப்பண்ணை ஏற்படுத்துவது, அதனை பயன்படுத்துவது குறித்து வேளாண்மைத்துறை அதிகாரி கே.வேலாயுதம் பேசினர்.

இந்திய தேசிய விதைக்கழகத்தின் தயாரிப்பு மேலாளர் ஏ.சிவராஜன், எண்ணை வித்துக்கள் ஆராய்ச்சி கூடத்தின் பேராசிரியர் முனைவர் ஆர்.வைத்யநாதன், திண்டிவனத்தைச் கிரிஷி விக்யான் கேந்திரத்தைச் சேர்ந்த பேராசிரியர் நடராஜன் உள்ளிட்ட பலர் பேசினர்.

கருத்தரங்கில் பெண்கள் உள்பட 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

### ஏரியில் விதி மீறி மண் எடுப்பு:கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தடப்பெரும்பாக்கம் கிராமத்தில் உள்ள ஏரியில் அரசு விதிகளை மீறி மண் எடுப்பதை கண்டித்து, வேண்பாக்கம் பஜார் வீதியில் சனிக்கிழமை விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஒன்றியம் தடப்பெரும்பாக்கம் கிராமத்தில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள ஏரியில் 14.02.13 முதல் 04.04.13 வரை 4725 லோடு சவுடுமண் அரசு விதிகளுக்கு உட்பட்டு எடுக்க (குவாரி) அனுமதி தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், விதி மீறி அரசு நிர்ணயம் செய்த அளவை காட்டிலும் அதிக அளவு மண் எடுத்து செல்வதாக புகார் எழுந்தது. இந்நிலையில், விதி மீறி செயல்படும் மண் குவாரியை ரத்து செய்யக்கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் தடப்பெரும்பாக்கம் ஏரி நீரை பயன்படுத்துவோர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விவசாயிகள் சங்க பொன்னேரி பகுதி செயலர் வைரமணி தலைமை வகிததார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொன்னேரி பகுதி செயலர் கோபால், விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் அனீப் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் மண் குவாரியை ரத்து செய்ய வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர்.

### திருமங்கலம் வறட்சிப் பகுதிகளில் அமைச்சர்கள் குழு ஆய்வு

மதுரை மாவட்டம், திருமங்கலம் பகுதியில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து, ஞாயிற்றுக்கிழமை 7 அமைச்சர்கள் அடங்கிய உயர்நிலைக் குழு ஆய்வு செய்தது.

திருமங்கலம் அருகே கள்ளிக்குடி பகுதியில் உள்ள மையிட்டான்பட்டி கிராமத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து, நிதியமைச்சர் ஒ. பன்னீர்செல்வம் தலைமையிலான உயர்நிலைக் குழுவினர் ஆய்வு செய்தனர். இந்தக் குழுவில், அமைச்சர்கள் நத்தம் இரா. விஸ்வநாதன், கே.பி. முனுசாமி, வைத்தியலிங்கம், தோப்பு வெங்கடாசலம், தாமோதரன், செல்லூர் கே. ராஜூ ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்தப் பகுதியில் பயிரிடப்பட்டிருந்த நெல், மக்காச்சோளம், பருத்தி முதலிய பயிர்கள் போதிய மழை இல்லாததால், வறட்சியால் பாதிக்கப்பட்டன.

பருத்தி பயிரிடப்பட்டிருந்த பகுதிகளில் ஒரு ஏக்கருக்கு 5 முதல் 6 கிலோ பருத்தி மட்டுமே விளைந்ததாகவும், ஒரு கிலோவுக்கு ரூ. 30 மட்டுமே விலை கிடைத்ததாகவும், விவசாயிகள் உயர்நிலைக் குழுவினரிடம் தெரிவித்தனர். இதனால், பெரிதும் நஷ்டமடைந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

விவசாயிகளுக்கு அமைச்சர்கள் ஆறுதல் கூறியதுடன், உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர்.

பின்னர், உயர்நிலைக் குழுவினர் டி.கல்லுப்பட்டி அருகேயுள்ள காடனேரி கிராமத்துக்குச் சென்று வறட்சிப் பகுதிகளை ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா, திருமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் எம். முத்துராமலிங்கம், வருவாய்த் துறையினர் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தண்ணீரை விலைக்கு வாங்கி பயிர்களுக்கு பாய்ச்சும் விவசாயிகள்

பழனி மற்றும் சுற்றுப் பகுதிகளில் கடும் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலையில், சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்ற விவசாயிகள் விலைக்கு தண்ணீரை வாங்கி வருகின்றனர்.

பழனிக்கு குடிநீர் ஆதாரமாக பாலாறு-பொருந்தலாறு அணை மற்றும் பல்வேறு கிணறுகள் உள்ளன. பழனியைச் சுற்றியுள்ள கணக்கன்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, தாளையூத்து, வயலூர், தொப்பம்பட்டி, வடபருத்தியூர் உள்ளிட்ட பல பகுதிகளில் விவசாயமே ஆதாரமாக உள்ளது.

பருவமழை பொய்த்துள்ள நிலையில், தற்போது கிணற்று நீரை நம்பியே இங்குள்ள விவசாயிகள் மக்காச்சோளம், கம்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்துவந்தனர். தற்போது, கிணற்று நீரும் வறண்டு விட்டதால், விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

தாளையூத்தில் மகுடீஸ்வரன் என்ற விவசாயி, சுமார் இரு நூறு தென்னை மரங்களை நட்டுள்ளார். 5 ஆண்டுகளுக்கு மேலான நிலையில், தற்போதுள்ள கடும் வறட்சியால் மரங்களைக் காப்பாற்றியாக வேண்டிய சூழலில், டிராக்டர் மூலம் தினமும் தண்ணீரை விலைக்கு வாங்கி வந்து மரங்களுக்கு பாய்ச்சி வருகிறார்.

இதேபோல், அப்பகுதியில் மாடுகள் வளர்க்கும் பலரும் விலைக்கு தண்ணீரை வாங்கி மாடுகளுக்கு வழங்குகின்றனர்.

பழனி சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழை இல்லாததால், விவசாயிகள் பெரிதும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

### ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்

சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என அமைச்சர்கள் குழுவிடம் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினர் வலியுறுத்தினர்.

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளைப் பார்வையிட தமிழக நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர்கள் முனுசாமி, வைத்தியலிங்கம் உள்ளிட்ட அமைச்சர்கள் குழு சனிக்கிழமை சிவகங்கை வந்தது.

இவர்களிடம் சிவகங்கை மாவட்ட மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாவட்டச் செயலர் கந்தசாமி, இக்கட்சி சார்புடைய தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகிகள் மாணிக்கம், ஆதிமூலம் உள்ளிட்டோர் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அதில் கூறியிருப்பதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் இந்தாண்டு 2.10 லட்சம் ஏக்கரில் நாற்று நடவு செய்யப்பட்டது. விவசாயிகள் நகைகளை அடகு வைத்து விவசாயப் பணிகளை மேற்கொண்டனர்.

ஆனால் இயற்கை ஏமாற்றியதால் மழையின்றி நெல் நாற்றுகள் கருகி சாவி அறுக்கும் நிலை உருவானது. இதனால் விவசாயிகள் பிழைக்க வழியின்றி வெளியூர்களுக்கும், செங்கல் சூளைக்கும் வேலைக்குச் செல்லும் நிலை உருவாகியுள்ளது.

விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வரை செலவு செய்து நாற்று நடவு செய்துள்ளனர். எனவே மானாவாரியாகப் பயிர் செய்த விவசாயிகளுக்கு நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம், தோட்டக்கலைப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வழங்க வேண்டும். விவசாயத்தை நம்பியுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நிவாரணம் ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழு நிவாரணம்: அமைச்சர்கள்

சிவகங்கை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி குறித்து முதல்வர் ஜெயலலிதாவிடம் விளக்கிக் கூறி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழு நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என வறட்சி நிவாரண உயர்நிலைக் குழுவில் இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் தெரிவித்தனர்.

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சர்கள் முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், வைத்தியலிங்கம், தோப்பு வெங்கடாசலம், தாமோதரன் ஆகியோர் கொண்ட உயர்நிலைக்குழுவினர் சிவகங்கை வந்தனர். அங்கு குழுவினர் விவசாயிகளிடம் மனுக்களைப் பெற்றனர். பின்னர் சிவகங்கை ஒன்றியத்தில் செம்பனூர் ஊராட்சியில் விவசாயம் செய்து சாவி அறுக்கப்பட்ட நிலங்களை பார்வையிட்டனர். அங்குள்ள பெரியகண்மாயில் தண்ணீர் கொள்ளளவு மற்றும் நீர்வரத்து குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தனர். கண்மாய்க்கு நீர்வரத்து பகுதிகள் உயரமாக இருப்பதால் கண்மாய்க்கு தண்ணீர் வரத்து பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதை சரிசெய்து

கொடுக்க மாவட்ட ஆட்சியர் ராஜாராமனிடம் அமைச்சர்கள் அறிவுறுத்தினர். அதன்பின் தச்சனேந்தல் ஊராட்சியில் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை அமைச்சர்கள் பார்வையிட்டு விவசாயிகளிடம் வறட்சி குறித்து கேட்டறிந்தனர். அப்போது நெற்பயிர்கள் கதிர்விடும் நிலையில் தண்ணீர் இல்லாமல் சாவியாகி விட்டதாக விவசாயிகள் தெரிவித்து சாவியாகிப்போன நெற் பயிர்களை அமைச்சர்கள் குழுவிடம் காட்டினர். சிவகங்கை மாவட்டத்தில் வறட்சி, விவசாயிகளின் நிலைமை குறித்து முதல்வர் ஜெயலலிதாவிடம் விளக்கிக் கூறப்படும். விவசாயிகள் எந்தவிதத்திலும் பாதிப்படையாத வகையில் முழுமையான நிவாரணம் கிடைத்திட முதல்வர் உத்தரவிடுவார் என அமைச்சர்கள் விவசாயிகளுக்கு நம்பிக்கை தெரிவித்தனர்.

இந் நிகழ்ச்சியில் வருவாய்த்துறை நிர்வாக ஆணையர் ஸ்ரீதர், வருவாய்த்துறை முதன்மைச் செயலர் ராஜீவ்ரஞ்சன், உள்ளாட்சித்துறை செயலாளர் சங்கர்,

வேளாண் துறை இயக்குநர் ராஜேந்திரன், தோட்டக்கலைத்துறை செயலர் சத்தியபிரதாசாகு, மாவட்ட ஆட்சியர் ராஜாராமன், கூடுதல் ஆட்சியர் கிரண்குராலா, சட்டப்பேரவை உறுப்பினர்கள் சோழன். பழனிச்சாமி, எம்.குணசேகரன், எஸ்.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சிறுதானிய மேம்பாடு: விவசாயிகளுக்கு பயிற்சி

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் தீவிர சிறுதானிய மேம்பாடு மூலம் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். முகாமில் சிறு, குறு தானியங்கள் சாகுபடி தொழில் நுட்பங்களும், சிறுதானியங்களின் உயர் விளைச்சல் ரகங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் சிறுதானியங்களில் மதிப்பூட்டப்பட்ட பொருள்களையும் அவற்றின் ஊட்டச்சத்து முக்கியத்துவம் பற்றியும் விரிவாக கூறப்பட்டது. சிறுதானியங்கள் அடங்கிய கண்காட்சியும் முகாமில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. இப்பயிற்சியுடன் விவசாயிகள் பட்டறிவு பயணமாக பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறுதானியங்கள் சாகுபடி மற்றும் மதிப்பூட்டல் பற்றி வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சியில் அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ராஜாராம், வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி மற்றும் இதர உதவிப் பேராசிரியர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில் அளித்தனர்.

### காருண்யா பல்கலை.யில் 20 இல் இலவச மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி

காருண்யா பல்கலைக்கழகத்தில் விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர் மற்றும் இல்லத்தரசிகள் பயன்பெறும் வகையில், மண்புழு உரம் தயாரிப்பு குறித்து மார்ச் 20 ஆம் தேதி இலவச பயிற்சி வழங்கப்பட உள்ளது.

காருண்யா பல்கலைக்கழக வளாகத்தில் மார்ச் 20 காலை 9.30 மணிக்கு இந்தப் பயிற்சி தொடங்குகிறது. பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு இலவச கையேடும் வழங்கப்படும். இதில் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள் தங்களது பெயர்களை 9894334484, 9487846616 என்ற எண்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம்.

துல்லிய பண்ணையம் திட்டம்:விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

பல்லடத்தில் துல்லிய பண்ணையம் திட்டத்தின்கீழ், திருப்பூர் மாவட்ட தோட்டக்கலைத் துறை, மலைப் பயிர்கள் துறை, பல்லடம் வட்டார தோட்டக்கலைத் துறை ஆகியவை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

முகாம் துவக்க விழாவில் பல்லடம் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கே.எஸ்.சுகந்தி வரவேற்றார். திருப்பூர் துணை இயக்குநர் எம்.தமிழ்செல்வன் முன்னிலை வகித்தார். பல்லடம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எம்.கே.ஆறுமுகம் தலைமை வகித்தார். பயிற்சி முகாமை பல்லடம் எம்.எல்.ஏ. கே.பி.பரமசிவம் துவக்கி வைத்தார். முகாமில் இந்தத் திட்டம் குறித்து பொங்கலூர் உதவி இயக்குநர் ஆர்.சித்ராதேவி, பல்லடம் வேளாண்மை உதவி இயக்குநர் சி.சண்முகம் ஆகியோர் பேசினர்.

வறட்சியை சமாளிக்க புதிதாக 86 ஆழ்குழாய் கிணறுகள்

கோடை காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்கும் பொருட்டு, திருப்பூரில் புதிதாக 86 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருப்பூர் மாநகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 8.77 லட்சம். 3 குடிநீர் திட்டங்கள் மூலமாக தினமும் 86.23 எம்.எல்.டி. குடிநீர் (ஒரு எம்.எல்.டி. என்பது 10 லட்சம் லிட்டர்) விநியோகிக்கப்படுகிறது. ஒரு நபருக்கு 99 லிட்டர் வீதம் 7 நாள்கள் இடைவெளியில் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மாநகராட்சி பகுதியில் குடிநீர் அல்லாத இதர உபயோகத்துக்கு கைப்பம்புகளுடன் கூடிய 407 ஆழ்குழாய் கிணறுகள், விசைப்பம்புகளுடன் கூடிய ஆயிரத்து 51 ஆழ்குழாய் கிணறுகள் மாநகராட்சி மூலமாக பராமரிக்கப்படுகின்றன.

இந் நிலையில், கோடை காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்கும் பொருட்டு, மின்விசை பம்புகளுடன் கூடிய ஆழ்குழாய் கிணறுகள் புதிதாக அமைக்கவும், குடிநீர் குழாய்கள் பதிக்கவும் ரூ.9.1 கோடி மதிப்பிலான பணிகள் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதில், புதிதாக 86 ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து, மின்விசை மோட்டார் பொருத்தும் பணிக்கு ரூ.4.08 கோடி, ஏற்கனவே உள்ள 78 ஆழ்குழாய் கிணறுகள், திறந்தவெளி கிணறுகளில் புதிதாக மின் மோட்டார்கள் பொருத்துதல் மற்றும் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிக்கு ரூ.3.65 கோடி, 16 இடங்களில் குடிநீர் விநியோக குழாய்கள் நீடிப்பு பணிக்கு ரூ.1.21 கோடி, 5 இடங்களில் புதிதாக

பிளாஸ்டிக் குடிநீர் தொட்டி அமைத்து, குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்கு ரூ.14.7 லட்சம் என மொத்தம் ரூ.9.1 மதிப்பிலான பணிகள் மாநகராட்சி மூலமாக மேற்கொள்ளப்பட உள்ளன.

இப் பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதாக மாநகராட்சி ஆணையர் செல்வராஜ் தெரிவித்தார்.

புதிய குடிநீர் திட்டம்: வரும் 2015, 2030, 2045-ம் ஆண்டுகளில் திருப்பூர் நகரில் மக்கள் தொகை முறையே 10, 16, 24.5 லட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குடிநீர் தேவை என்பது முறையே 135 எம்.எல்.டி., 216 எம்.எல்.டி., 330 எம்.எல்.டி. ஆக அதிகரிக்கும் என எதிர்பார்த்து, 4-ம் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் பூர்வாங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்காக, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் மூலமாக மாதிரி திட்ட விவர அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. வரும் ஜூலை இறுதிக்குள் முழுமையான திட்ட அறிக்கை கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், அதன் பிறகு, அரசு நிதியுதவியுடன் புதிய குடிநீர் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம்: வறட்சி நிவாரணமாக வழங்கக் கோரிக்கை

திருப்பூர் மாவட்டத்தில் வறட்சியை கருத்தில் கொண்டு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வறட்சி நிவாரணமாக வழங்க வேண்டும் என பி.ஏ.பி. பாசன விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக பி.ஏ.பி. மங்கலம் நீரினை பயன்படுத்துவோர் சங்க முன்னாள் தலைவர் பொன்னுசாமி முதல்வருக்கு அனுப்பிய கோரிக்கை மனு:

திருப்பூர் மாவட்டத்தில் வறட்சி நிலையை கணக்கிட, கிராம நிர்வாக அலுவலகங்களில் உள்ள அடங்கல் பதிவு ஆய்வு செய்யப்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர். அடங்கல் பதிவுகளை கொண்டு ஆய்வு செய்தால், விவசாயிகள் பயனடைய முடியாது. முறையாக விவசாய நிலங்களை கள ஆய்வு செய்து உண்மை நிலவரத்தை அறிந்து, அடங்கலில் பதிவு செய்யும் வழக்கம் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இல்லை. பழைய பதிவுகளை திருத்தி எழுதுகின்றனர்.

எனவே, அடங்கல் கணக்கில் உள்ள விவரங்களை கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவி வழங்கக் கூடாது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்க வேண்டுமெனில் சிறு, குறு விவசாயிகள் பட்டியலை கொண்டு நிவாரணம் வழங்க வேண்டும்.

சாகுபடி நிலங்களை கண்டறிந்து, ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணமாக வழங்க வேண்டும். மானாவாரி, கிணற்று நீர் பாசனம், வாய்க்கால் பாசனம் என அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் அளிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குண்டேரிப்பள்ளம் அணை திறப்பு:விவசாயிகள் மகிழ்ச்சி

குண்டேரிப்பள்ளம் அணை திறக்கப்பட்டுள்ளதால், வெங்காயம் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்டம், கோபி அருகே கொங்கர்பாளையத்தில் மலைகள் சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ளது குண்டேரிப்பள்ளம் அணை. இந்த அணையின் கொள்ளளவு 108 மில்லியன் கன அடி. அணையின் தற்போதைய நீர்மட்டம் 74 மில்லியன் கன அடி. குண்டேரிப்பள்ளம் அணை மூலமாக 2400 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டுதோறும் மார்ச் மாதம் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படும். அதேபோல கடந்த சில நாள்களுக்கு முன் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இதனால் அப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள விவசாயப் பயிர்கள் பயன்பெறும். குறிப்பாக, குண்டேரிப்பள்ளம் பாசனப் பகுதியில் வெங்காயம் தான் அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. அடுத்தபடியாக வாழை, நெல் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மறைமுக வாழைத்தார் ஏலத்துக்கு எதிர்ப்பு

கோபி வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் மறைமுக வாழைத்தார் ஏலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை, சனிக்கிழமை ஆகிய இரு நாள்கள் வாழைத்தார்கள் ஏல விற்பனை நடைபெறுகிறது.

இதில் கோபி, சிறுவலூர், மொடக்குறிச்சி, அரச்சலூர், அவல்பூந்துறை, புஞ்சை புளியம்பட்டி, அன்னூர் உள்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் வாழைத்தார்களை கொண்டு வருகின்றனர். இதேபோல கோபி, சத்தியமங்கலம், திருப்பூர் உள்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் வாழைத்தார்களை வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த மாதம் 22 ஆம் தேதி ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர் நாள் கூட்டத்தில், காலை 10 மணிக்கு மேல் வாழைத்தார்களை கொண்டு வர அனுமதிக்கக் கூடாது. கதலி, நேந்திரன், செவ்வாழை, ஆந்திரா ரஸ்தாளி ஆகிய ரக வாழைத்தார்களை எடை போட்டு விற்பனை செய்ய வேண்டும்.

மற்ற ரக வாழைப்பழங்களை மறைமுகமாக ஏலம் விட வேண்டும். விவசாயிகளிடம் இருந்து வசூலிக்கப்படும் சேவைக் கட்டணத்தை 6 சதவீதத்தில் இருந்து 3 சதவீதமாக குறைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று மறைமுக ஏலம் நடத்த ஆட்சியர் உத்தரவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் ஆட்சியர் உத்தரவுப்படி, சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மறைமுக ஏலத்துக்கு வியாபாரிகளும், விவசாயிகள் சிலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். மேலும், கோபிசெட்டிபாளையம்-மொடச்சூர் சாலையில் வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் 30-க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த கோபிசெட்டிபாளையம் போலீஸ் இன்ஸ்பெக்டர் இளங்கோ மற்றும் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. இதன் பின்னர், கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க அதிகாரி பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது மறைமுக ஏலம் நடத்தும்போது வாழைத்தார்கள் விற்பனையாகவில்லை என்றால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். எனவே, மறைமுக ஏலத்தை கைவிட்டு, நேரடி ஏலத்தை தொடர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

### மரக்கன்று நடும் விழா

திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாமில், மரக்கன்று நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

இக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களின் சிறப்பு முகாம் திருவண்ணாமலையை அடுத்த சு.பாப்பம்பாடி ஊராட்சியில் நடைபெற்று வருகிறது. முகாமின் ஒரு பகுதியாக, மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. கல்லூரிப் பதிவாளர் ர.சத்தியசீலன் தலைமை வகித்தார். செயலர் மா.புர்க்கிந்தராஜ் முன்னிலை வகித்தார். மாணவி டி.ஞான பிரியதர்ஷினி வரவேற்றார்.

திருவண்ணாமலை மாவட்ட வன அலுவலர் வி.நாகநாதன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு மரக்கன்றுகள் நடும் விழாவைத் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, உலகம் வெப்பமயமாதலைத் தடுக்கவும், மழை வளம் பெருக்கவும் மரம் எவ்வாறு பயன்படுகிறது என்பது குறித்து பொதுமக்களிடையே மாணவ-மாணவிகள் எடுத்துரைத்தனர்.

கிராமத்தின் பல்வேறு பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்பட்டன. இவ் விழாவில் நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர் எம்.அய்யம்பிள்ளை, பேராசிரியர் டி.முரளி மற்றும் மாணவ-மாணவியர் கலந்துகொண்டனர்.

### விவசாயத் தொழிலாளர் சங்க விழிப்புணர்வு பிரசார இயக்கம்

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் நடைபெறும் கோட்டை நோக்கிய பேரணியை விளக்கி, சனிக்கிழமை திருவண்ணாமலையில் விழிப்புணர்வு பிரசாரம் நடைபெற்றது.

ஏழை-எளியோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, பசுமை வீடு கட்ட ரூ.3 லட்சம் நிதி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப்ரல் 2-ம் தேதி கோட்டையை நோக்கி பேரணி நடத்த தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் திட்டமிட்டுள்ளது.

இப் பேரணியின் நோக்கம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நாடு தழுவிய விழிப்புணர்வு பிரசார இயக்கம் நடைபெற்று வருகிறது. சனிக்கிழமை திருவண்ணாமலைக்கு வந்த பிரசார இயக்க வரவேற்பு நிகழ்ச்சிக்கு தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க திருவண்ணாமலை மாவட்டக் குழுவின் தலைவர் வே.முத்தையன் தலைமை வகித்தார்.

அகில இந்திய செயலர் அ.ராமமூர்த்தி, திருவண்ணாமலை மாவட்டச் செயலர் இரா.தங்கராஜ், விழுப்புரம் மாவட்டச் செயலர் கே.கருணாமூர்த்தி ஆகியோர் பேரணியின் நோக்கம் குறித்து விளக்கிப் பேசினர். தொடர்ந்து, கலைக்குழு மூலம் நகரின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு பிரசார இயக்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில், ஏஐடியூசி மாவட்ட துணைத் தலைவர் கு.ஜோதி, தமிழ்நாடு கலை இலக்கியப் பேரவை மாவட்டச் செயலர் அ.கி.அரசு, மாவட்ட நிர்வாகக் குழு சு.கிருஷ்ணராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

செங்கத்தில்...

இதுபோல் செங்கம் வந்த பிரசார இயக்கத்தினரை தியாகி ராமசாமி, ஏஐயூயுசி மாவட்டச் செயலர் மாதேஸ்வரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகரச் செயலர் சர்தார் உள்ளிட்டோர் வரவேற்றுப் பேசினர்.

### மணிலா சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி

செய்யாறை அடுத்துள்ள கீழ்நெல்லி வேதபுரி வேளாண்மை அறிவியல் மையத்தில், மணிலாவில் ஒருங்கிணைந்த சாகுபடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது.

செய்யாறு வட்டார மணிலா விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் மணிலாவின் உற்பத்தியை பெருக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட ரகங்களுக்கான தொழில்நுட்பம் குறித்த இப் பயிற்சிக்கு செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமை தாங்கினார். திண்டிவனம் எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானி ம.வைத்தியலிங்கம் பங்கேற்று, மணிலாவில் புதிய ரகங்கள் மற்றும் உயர் விளைச்சல் தரக்கூடிய கொத்து ரகத்தின் சிறப்புகளை விளக்கினார்.

மேலும் விதைக்கும் கருவி, மணிலா பச்சைக்கொடியிலிருந்து காய்களைப் பிரித்தெடுக்கும் கருவி போன்றவற்றின் சிறப்புகளை ஒலி-ஒளி படக்காட்சி மூலம் விவசாயிகளிடையே விளக்கினார். பயிர் நுண்ணியல் துறை முனைவர் உமாசங்கரேஸ்வரி, உயிர் உரங்களின் முக்கியத்துவம் குறித்தும், வெம்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டியன், மழை துப்பாக்கி நீர்ப்பாசன முறை குறித்தும் விளக்கினர்.

இளநிலை ஆராய்ச்சி ஆய்வாளர் ஜெயக்குமார், செய்யாறு வட்டார மணிலா விவசாயிகள் பலரும் பயிற்சி வகுப்பில் பங்கேற்றனர்.

வத்தல் மலையில் "சில்வர் ஓக்' மரம் கடத்தல் அதிகரிப்பு

தருமபுரி மாவட்டத்தில் சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்ட வத்தல்மலையில் குளிர்ந்த தட்பவெப்ப நிலையைத் தரக்கூடிய விலை உயர்ந்த "சில்வர் ஓக்' மரங்கள் சமூக விரோதிகளால் வெட்டிக் கடத்தப்படுவது அதிகரித்து வருகிறது.

தருமபுரியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது வத்தல் மலை. கடல் மட்டத்திலிருந்து 1,100 மீட்டர் உயரம் உள்ள இந்த மலையானது எப்போதும் குளிர்ந்த தட்பவெப்ப நிலை நிலவும் பகுதியாகும்.

இந்த மலைப் பகுதியில் சின்னங்காடு, ஒன்றியக்காடு, மண்ணான்குழி, பெரியூர், குழியானூர், நாய்க்கனூர், கோட்டலாங்காடு, பால்சிலம்பு போன்ற குக்கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்களுக்கு உள்பட்ட பகுதிகளில் 450 ஏக்கர் பரப்பளவில் காபி, மிளகு, எலுமிச்சை, ஆரஞ்சு, கொய்யா, சீதாப்பழம், நெல், சாமை, கேழ்வரகு போன்ற பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். மேலும், குளிர்ச்சியான தட்பவெப்ப நிலையைத் தரக் கூடிய விலை உயர்ந்த சில்வர் ஓக் மரங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அரசு புறம்போக்கு நிலங்கள் மட்டுமல்லாமல் தனியார் பட்டா நிலத்திலும் சில்வர் ஓக் மரங்கள் பரவலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

எழில் சூழ்ந்த வந்தல் மலையானது சுற்றுலாத் தலமாக தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இங்கு தாவரவியல் பூங்கா, ஏரி அமைத்தல், படகு சவாரி, பார்வையிடும் கோபுரம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் வகையில் வத்தல் மலை அடிவாரத்திலிருந்து வத்தல் மலை மேல் உள்ள பெரியூர் வரை 16 கி.மீ. தொலைவுக்கு ரூ.13.14 கோடியில் முதன்முதலாக சாலை அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில், வத்தல் மலையில் உள்ள சில்வர் ஓக் மரங்களை சமூக விரோதிகள் அதிக அளவில் வெட்டி, கடத்திச் செல்கின்றனர். சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்ட பின்னர், மரங்கள் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக புகார் எழுந்துள்ளது. குறிப்பாக, பெரியூர் அரசு புறம்போக்கு இடத்தில் சர்வே எண் 94-இல் வளர்க்கப்பட்டுள்ள சில்வர் ஓக் மரங்கள் அதிக அளவில் வெட்டிக் கடத்தப்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன.

சட்டவிரோதமாக மரங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க வருவாய்த் துறையினரும், வனத் துறையினரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். இதுபோன்ற சம்பவங்களுக்கு வருவாய்த் துறையினர் உடந்தையாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சில்வர் ஓக், நீலகிரி தைலம் மரம் போன்ற மரங்கள் வெட்டிக் கடத்தப்படுவதால் வத்தல் மலையில் உள்ள குளிர்ந்த தட்பவெப்ப நிலையை இழக்க வேண்டி இருக்கும். இதனால், இந்த மலையானது தனது சிறப்பை இழக்கும் நிலையில் காபி சாகுபடியும் குறையும். சுற்றுலா வளர்ச்சிக்காக அரசு செலவிடும் பல கோடி மதிப்பிலான நிதி பயனற்றுப் போகும் என அந்தப் பகுதி மக்கள் கூறினர்.

எனவே, வத்தல் மலையில் உள்ள சில்வர் ஓக் மரங்களை வெட்டிக் கடத்துவதைத் தடுக்க உடனடியாக சோதனைச் சாவடியை ஏற்படுத்த மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும் என சமூக ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர். சேதனைச்சாவடிகள் ஏற்படுத்துவன் மூலம் மரங்கள் கடத்தல் தடுக்கப்படுவதுடன் வத்தல் மலையின் இயற்கை எழிலும் காக்கப்படும்.

### தலித் விவசாயிகளுக்கு விசை உழுவை அளிப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகேயுள்ள மலையாண்ட அள்ளி கிராமத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஞாயிற்றுக்கிழமை தலித் விவசாயிகள் சங்கத்திற்கு விசை உழுவை வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன் தலைமை வகித்தார். ஊத்தங்கரை தொகுதி எம்எல்ஏ மனோரஞ்சிதம் பங்கேற்று, தலித் விவசாயிகள் சங்க குழுவிற்கு ரூ. ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 950 மதிப்பிலான விசை உழுவையினை மானிய விலையில் வழங்கிப் பேசியது:

ஆதிதிராவிட விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் இந்த விசை உழுவையினை பயன்படுத்தி சங்கத்திற்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தி கொண்டு, தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் என்றார் அவர்.

விழாவில், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ. 5 ஆயிரம் மதிப்பிலான நெல் விதை விதைப்பு கருவி மானியத்தில் வழங்கப்பட்டது. தலித் விவசாயிகளுக்கு மானியத்தில் தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

முன்னதாக, மத்தூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ரவீந்தர் வரவேற்றார். முடிவில் மத்தூர் வேளாண்மை துணை அலுவலர் சீனிவாசன் நன்றி கூறினார்.

இந்த விழாவில், சுய உதவி குழு தலைவர் ராஜீ மற்றும் உறுப்பினர்கள், மத்தூர் உதவி வேளாண்மை அலுவலர்கள் ஹரிக்குமார், பிரபு, தமிழ்வாணன், அட்மா திட்ட அலுவலர்கள் செல்வராஜ், முகமதுரபி, முரளி ஆகியோர் கலந்து கொண்டனர்

## விடுபட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

டெல்டா பகுதியில் விடுபட்ட விவசாயிகளுக்கும் உடனடியாக நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென காங்கிரஸ் விவசாய பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் விவசாய பிரிவு நிர்வாகிகள் கூட்டம் கண்டிச்சங்காட்டில் மாவட்ட காங்கிரஸ் விவசாய பிரிவு தலைவர் கே.எம்.எஸ்.ஏ. ஆசாத் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மாவட்டத் துணைத் தலைவர்கள் ஆ. ராஜா, மா. தவமணி, ப. ரவிச்சந்திரன், வேட்டனூர் பொன். ராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

அறந்தாங்கி அக்கினிபஜாரிலிருந்து இடையார், புதுவாக்கோட்டை, கம்மங்காடு, பத்தரசங்கோட்டை 4 சாலை உள்ளிட்ட இடங்களுக்குச் செல்வதற்கு வசதியாக வெள்ளாற்றில் பாலம் கட்ட வேண்டும்.

அறந்தாங்கி கடையாத்துப்பட்டி, செங்கமாரி, தாஞ்சூர், அரிமளம் வழியாக புதுக்கோட்டைக்கு பேருந்து இயக்க வேண்டும்.

மேல்மங்களம் கிழக்கு கிராம பகுதிக்கு மயானக்கரை அமைத்துத் தர வேண்டும்.

அறந்தாங்கி வாரச் சந்தை மற்றும் சரபோஜி வணிக வளாகத்தை நகராட்சிக்கு தஞ்சாவூர் சத்திரம் நிர்வாகம் மாற்றித் தர வேண்டும்.

அறந்தாங்கிக்கு அறிவிக்கப்பட்ட பொறியியல் கல்லூரியை அழியாநிலையில் அமைத்துத் தர வேண்டும்.

காரைக்குடி, திருவாரூர் அகல ரயில்பாதை அமைக்கும் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக, மாவட்ட விவசாய பிரிவு துணைத் தலைவர் நாகுடி கபார்கான் வரவேற்றார். மணமேல்குடி வட்டாரத் தலைவர் சையது முகமது நன்றி கூறினார்.

## பிரான்ஸ் - இந்தியா கூட்டு முயற்சியில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் தொடக்கம்

பிரான்ஸ் - இந்தியா கூட்டு முயற்சியில் சோதனை அடிப்படையில் காரைக்காலில் 2 வார்டுகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டில் உள்ள கோத் தெ அர்மூர் பிராந்தியமும், காரைக்கால் நகராட்சியும் இணைந்து குப்பைகளை மக்கும், மக்காத குப்பையென பிரித்து உரம் தயாரிப்புக்கான திடக் கழிவு மேலாண்மைக்கான ஒப்பந்தம் செய்து கொண்டன. இதன் திட்ட தொடக்க நிகழ்ச்சி காரைக்காலில் நடைபெற்றது. புதுச்சேரி வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு தொடங்கிவைத்து பேசியது:

காரைக்காலை சுகாதாரமான நகரமாக உருவாக்க புதுவை அரசு எடுத்துவரும் முயற்சிகளில் இதுவும் ஒன்று. மேலும், ஒட்டுமொத்த புதுவை மாநிலமும் சுகாதாரமாக மாற புதுவை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

பேரவை உறுப்பினர்கள் ஏ.எம்.எச். நாஜிம், பி.ஆர்.என். திருமுருகன் ஆகியோர் பேசும்போது, பிளாஸ்டிக் பயன்பாடு வேண்டாம் என்ற விழிப்புணர்வு மக்களிடையே வருவதற்கு மாவட்ட நிர்வாகம் முயற்சிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

பிரான்ஸ் நாட்டின் கோத் தெ அர்மூர் பிராந்திய துணைத் தலைவர் இஷபெல் நிக்கோலஸ் பேசும்போது, 2 வார்டுகளில் இது ஓராண்டு செயல்படுத்த ரூ. 92 லட்சம் செலவிடப்படுகிறது. பிரான்ஸ் 60 சதவீதமும், காரைக்கால் நகராட்சி 40 சதவீத செலவையும் ஏற்கும் என்றார்.

மாவட்ட ஆட்சியர் ஜெ. அசோக்குமார், பிரான்ஸ் துணைத் தூதுவர் எலென் ஷார்ப்பான், கோத் தெ அர்மூர் அமைப்பாளர் மிசேல் பாஸ்டர், காரைக்கால் மாவட்ட உதவி ஆட்சியர் சந்தீப்குமார் சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மரபு சார்ந்த வேளாண் தொழில்நுட்பத்தை பாதுகாக்க வேண்டும்

மரபு சார்ந்த வேளாண் தொழில்நுட்பம் பாதுகாக்கப்பட வேண்டும் என நாகர்கோவிலில் நடைபெற்ற குமரி மாவட்ட உழவர் கோரிக்கை கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்தரங்குக்கு தமிழக உழவர் இயக்க குமரி மாவட்டச் செயலர் ச. ஜான்விக்டர் தாஸ் தலைமை வகித்தார்.

தேரூர் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் ஏ. சண்முகம்பிள்ளை, உழவர் பெருமன்ற மாவட்டச் செயலர் பி. ஹென்றி, தலைவர் எஸ்.மீனாட்சிசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கருத்தரங்கில் தமிழக உழவர் இயக்க மாநிலச் செயலர் தமிழ்வேந்தன் பேசியதாவது: வளமிகுந்த குமரி மாவட்டத்தில் இப்போது, குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளங்கள் இம்மாவட்டத்தில் இருந்தன. அவை படிப்படியாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

கால்வாய்கள், ஏரிகள் ஆக்கிரமிப்புக்குள்ளாகி அவற்றின் பரப்பளவும் சுருங்கி விட்டன. இயற்கை வளம் சூறையாடப்பட்டு வருகிறது. பாசனக் கால்வாய்கள், குளங்கள் தூர்வாரப்படவில்லை. விவசாய நிலங்கள், வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

போதிய தண்ணீர் கிடைக்காததால், நெல் பயிரிடுவதை விவசாயிகள் படிப்படியாக கைவிட்டு வருகின்றனர். நெல்லுக்கு மாற்றாக வாழை, தென்னை, ரப்பர் பயிரிடும் சூழல் ஏற்பட்டுள்ளது.

உழவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் நீர்வளமும், நிலவளமும் பாதுகாக்கப்பட வேண்டும். வணிக வேளாண்மை என்ற பெயரில், பாரம்பரிய மரபு சார்ந்த தொழில்நுட்பங்கள் அழிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்றார் அவர்.

தமிழக உழவர் இயக்க மாநில துணைச் செயலர் எஸ். மோகன், பாசனதுறைத் தலைவர் ஏ. வின்ஸ் ஆன்றோ, இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளைத் தலைவர் ஆர்.எஸ். லால்மோகன், தமிழக உழவர் இயக்க நிர்வாகிகள் சி.பி. சந்துரு, சார்ஸ் தனபாலன், ஜனார்த்தனன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் தாணுபிள்ளை, முருகேசபிள்ளை, பூமிபாதுகாப்பு சங்கத் தலைவர் பத்மதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பனைப் பொருள்கள் உணவுத் திருவிழா

தூத்துக்குடியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பனைப் பொருள்கள் உணவுத் திருவிழாவில் பனை மரத்தில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் இடம்பெற்றிருந்தன.

தமிழ்நாடு பனைத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில், தூத்துக்குடியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பனைப் பொருள்கள் உணவுத் திருவிழாவை மாநகராட்சி மேயர் எல். சசிகலா புஷ்பா தொடங்கி வைத்தார்.

இதையொட்டி நடத்தப்பட்ட விற்பனை கண்காட்சியில் பனை மரத்தில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களான பதநீர், கருப்புகட்டி, நுங்கு, பனங்கிழங்கு, பனை ஓலை கொழுக்கட்டை, பனங்கற்கன்டு, கருப்புகட்டி பனியாரம், கருப்புகட்டி பவுடர், கருப்புகட்டி பருத்திபால் உள்ளிட்டவை இடம்பெற்றிருந்தன.

இதுதவிர, பனை ஓலை மூலம் தயாரிக்கப்பட்ட அலங்காரப் பொருள்கள், மிட்டாய் பெட்டி, பூந்தொட்டிகள், பொம்மைகளும் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன. உணவுத் திருவிழாவையொட்டி பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நிகழ்ச்சியில், தமிழ்நாடு பனைத் தொழிலாளர்கள் சங்க பொதுச் செயலர் ராயப்பன், தலைவர் ஸ்டீபன், பொருளாளர் காசிராஜன், உணவுத் திருவிழா ஒருங்கிணைப்பாளர் மாரிராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தினத்தந்தி**

**நடப்பு 2012–13–ஆம் நிதி ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாய துறையின் பங்கு குறையும்**

புதுடெல்லி

நடப்பு 2012–13–ஆம் நிதி ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில், விவசாய துறையின் பங்கு 13.7 சதவீதமாக குறையும் என விவசாய துறைக்கான ராஜாங்க அமைச்சர் தாரிக் அன்வர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

**விளைநிலங்கள் அழிவு**

2009–10–ஆம் நிதி ஆண்டில், மொத்த உற்பத்தியில் விவசாய துறையின் பங்கு 14.6 சதவீதமாகவும், 2010–11–ஆம் நிதி ஆண்டில் 14.5 சதவீதமாகவும், 2011–12–ஆம் நிதி ஆண்டில் 14.1 சதவீதமாகவும் இருந்தது. அதற்கு முந்தைய ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாய துறையின் பங்கு சராசரியாக 20 சதவீதமாக இருந்தது. இந்த நிலை கடந்த சில ஆண்டுகளாக மாறி வருகிறது. விளைநிலங்கள் அழிந்து வருவது, மழை பற்றாக்குறை, விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறை, அதிக கூலி, குறைந்த லாபம் போன்ற காரணங்களால் விவசாய துறையின் வளர்ச்சி குறைந்து வருகிறது.

நடப்பு வேளாண் பருவத்தில் (2012 ஜூலை – 2013 ஜூன்) உணவு தானியங்கள் உற்பத்தி கடந்த ஆண்டை விட 4 சதவீதம் குறைந்து 25.01 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டில் 25.93 கோடி டன்னாக இருந்தது. பருவம் தவறிய மழை மற்றும் பற்றாக்குறை மழையால் உணவு தானிய உற்பத்தி குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு பகுதியில் உள்ள 7 மாநிலங்களில் (அசாம், பீகார், சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா, உத்தரபிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம்) பசுமை புரட்சியை ஏற்படுத்தி அரிசி உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது. இதனால், கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் இந்த மாநிலங்களில் கூடுதலாக ஒரு கோடி டன் அரிசி உற்பத்தியாகி உள்ளது. இந்த திட்டத்தின் வெற்றி காரணமாக எதிர்வரும் நிதி ஆண்டில் ரூ.1,000 கோடியை இந்த மாநிலங்களுக்காக ஒதுக்கி உள்ளதாக ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு வலு சேர்க்க வேண்டுமானால், வேளாண் துறையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். 2013–14–ஆம் நிதி ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு 22 சதவீதம் உயர்த்தப்பட்டு ரூ.27,049 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**குறைந்தபட்ச ஆதரவு விலை**

விவசாய விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு உயர்த்தி வருகிறது. வரும் நிதி ஆண்டிற்கான வேளாண் கடன் இலக்கு ரூ.5.75 லட்சம் கோடியிலிருந்து ரூ.7 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் வட்டி சலுகை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற காரணங்களால் இனிவரும் ஆண்டுகளில் மொத்த உற்பத்தியில் வேளாண் துறையின் பங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**நடப்பு பருவத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி 2.9 சதவீதம் அதிகரிக்கும்**

மும்பை

நடப்பு 2012–13 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) பருப்பு வகைகள் உற்பத்தி 2.9 சதவீதம் அதிகரிக்கும் என மத்திய விவசாய அமைச்சகம் தெரிவித்துள்ளது. ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்) பருப்பு சாகுபடி பரப்பளவு 0.8 சதவீதம் விரிவடைந்து 1.52 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. குறிப்பாக உளுந்து பயிரிடும் பரப்பளவு 5.6 சதவீதம் உயர்ந்து 95.20 லட்சம் ஹெக்டேராக விரிவடைந்துள்ளது. எனவே இந்த ஆண்டு வேளாண் பருவத்தில் பருப்பு விளைச்சல் நன்றாக இருக்கும் என இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

மார்ச் 1 நிலவரப்படி நெல், கோதுமை அல்லாத பிற தானியங்கள் பயிரிடும் பரப்பளவு 5.4 சதவீதம் அதிகரித்து 63.8 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. எனினும் கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) விளைச்சல் குறைந்ததால் ரபி பருவத்தில் சாதாரண தானியங்கள் உற்பத்தி வளர்ச்சியை பாதிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒட்டுமொத்த அளவில் 2012–13 பருவத்தில் உற்பத்தி சரிவடைய வாய்ப்புள்ளது.

இதே போன்று எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியும் 1.1 சதவீதம் குறைந்து 2.95 கோடி டன்னாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. உணவு அல்லாத பயிர்களில் கரும்பு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்படும் என தெரிகிறது. நடப்பு நிதி ஆண்டில் கரும்பு மகசூல் 7.3 சதவீதம் சரிவடைந்து 33.45 கோடி டன்னாக குறையும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## கடல் போல் தண்ணீர் சூழ காட்சியளித்த நிலைமாறி விவசாய நிலமாக மாறி வருகிறது மேட்டூர் அணை

சேலம்

கடல் போல் தண்ணீர் சூழ காட்சி அளித்த மேட்டூர் அணை விவசாய நிலம் போல் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு பச்சை, பசேல் என காட்சி அளிக்கிறது.

<u>மேட்டூர் அணை</u>

பருவமழை காலத்தில் பெய்யும் மழை நீரை சேமித்து வைத்து குடிநீர் மற்றும் பாசனதேவையை பூர்த்தி செய்வதற்காக 1934–ம் ஆண்டு மேட்டூர் அணை கட்டப்பட்டது. 120 அடி வரை தண்ணீரை தேக்கி வைக்கும் தகுதி உடைய மேட்டூர் அணையின் மூலம் சேலம், ஈரோடு, நாமக்கல், திருச்சி, கரூர், தஞ்சாவூர், கடலூர், புதுக்கோட்டை உள்பட 11 மாவட்டங்களின் பாசனவசதி, குடிநீர்வசதி பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

பருவகாலங்களான ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் முடிய பெய்யும் மழை நீரை மேட்டூர் அணையில் தேக்கி வைத்து பயன்படுத்துவதால் தண்ணீர் அணையின் இரண்டு கரைகளையும் தொட்டு பரந்து விரிந்து கடல் போல் காட்சி அளிக்கும்.

விவசாய நிலமாக மாறியது

ஆனால் இந்த ஆண்டோ, மழை இன்றி மேட்டூர் அணை வறண்டு பாலைவனமாக காட்சி அளிக்கிறது. தண்ணீர் தேங்கி நின்ற இடங்களின் பல பகுதிகள் கரடு, பாறைகளாக காட்சி அளிக்கிறது. மேட்டூர் அணையின் நீர்தேக்க பகுதிகளான மாசிலாபாளையம், மூலக்காடு, சின்னமேட்டூர் உள்பட பல பகுதிகளில் தற்போது எள், சோளம் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன. எங்கு பார்த்தாலும் அவை பச்சை பசேல் என்று பசுமையாக காட்சி அளிக்கிறது. அதாவது தண்ணீரில் மூழ்கி இருந்த நீர்தேக்க பரப்புகள் எல்லாம் தண்ணீர் இல்லாத காரணத்தால் விவசாய நிலமாக மாறி வருகின்றன.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை: பவானிசாகர் அணை நீர்மட்டம் 7 அடி உயர்ந்தது விவசாயிகள் ஆறுதல்**

ஈரோடு

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மிதமான மழை பெய்து வருவதால், பவானிசாகர் அணை நீர் மட்டம் 7 அடி உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் ஆறுதல் அடைந்து உள்ளனர்.

பவானிசாகர் அணை

தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்ட பவானிசாகர் அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 120 அடியாகும். இதில் சகதி 15 அடி கழித்து நீர்மட்ட உயரம் 105 அடியாக கணக்கிடப்படுகிறது. அணையின் மொத்த நீர் கொள்ளவு 32 டி.எம்.சி. ஆகும்.

ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தின் ஒரு பகுதியை பசுமையாக வைத்துள்ள பவானிசாகர் அணை புஞ்சைபுளியம்பட்டி, சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம், பவானி உள்ளிட்ட நகராட்சி மற்றும் நுஶிற்றுக்கணக்கான பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளின் குடிநீர் பிரச்சனையை தீர்த்து வருகிறது.

பாசன வசதி

இது மட்டுமின்றி அணையின் இருந்து வெளிவரும் கீழ்பவானி வாய்க்கால் மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்களும், பவானி ஆற்றின் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காளியங்காரயன் பாசனப்பகுதியை சேர்ந்த 50 ஆயிரம் ஏக்கர் பாசனப்பகுதியும் வளம் பெறுகிறது.

பவானிசாகர் அணைக்கு நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடாலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாரும் நீர்வள ஆதாரங்களாக விளங்குகிறது.

கடந்த ஆண்டு

கடந்த ஆண்டு இதே நேரத்தில் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 71.39 அடியாக இருந்தது. அணையின் நீர்மட்டம் 64 அடியாக இருந்தது. இதனால் கடந்த ஆண்டு வறட்சியின்போது குடிநீருக்கு எவ்வித பிரச்சனையும் இல்லாமல் பாசனத்திற்காகவும் பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆனால் தற்போது பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் அணைக்கு சொற்ப அளவு தண்ணீரே வந்தது. அதே சமயம் அரசு அவ்வப்போது பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட்டதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறையத்தொடங்கியது.

நீர்மட்டம் உயர்ந்தது

இந்த நிலையில் கடந்த வாரம் மின் உற்பத்திக்காக பில்லூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட்டதாலும், நீலகிரி மலைப்பகுதியில் லேசாக மழை பெய்ததாலும் அணைக்கு வரும் தண்ணீர் அளவு சற்று அதிகரித்துள்ளது.

இதனால் கடந்த 10 நாட்களுக்கு முன் 33 அடியாக குறைந்த பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 39.35 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் ஈரோடு மாவட்ட விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர்.

**கோபி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் மறைமுக ஏலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சாலைமறியல்**

கோபிசெட்டிபாளையம்,

கோபி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் மறைமுக ஏலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

கூட்டுறவு சங்கம்

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய 2 நாட்கள் ஏலம் மூலம் வாழைப்பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த ஏலத்துக்கு கோபிசெட்டிபாளையம், கள்ளிப்பட்டி,

காசிபாளையம், சிறுவலூர், மொடக்குறிச்சி, அறச்சலூர், அவல்பூந்துறை, நம்பியூர், புஞ்சைபுளியம்பட்டி, அன்னூர் உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் வாழைப்பழங்களை கொண்டு வருகின்றனர். இதேபோல், கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், திருப்பூர் உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாழைப்பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.

கோரிக்கை

இந்த நிலையில் கடந்த மாதம் 22–ந் தேதி ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், கோபி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் காலை 10 மணிக்கு மேல் வாழைப்பழத்தார்களை கொண்டு வர அனுமதிக்கக் கூடாது. கதலி, நேந்திரன், செவ்வாழை, ஆந்திரா ரஸ்தாளி ஆகிய ரக வாழைப்பழங்களை எடை போட்டு விற்பனை செய்ய வேண்டும்.

மற்ற ரக வாழைப்பழங்களை மறைமுகமாக ஏலம் விட வேண்டும். விவசாயிகளிடம் இருந்து வசூலிக்கப்படும் சேவைக் கட்டணத்தை 6 சதவீதத்தில் இருந்து 3 சதவீதமாக குறைக்க வேண்டும் என விவசாயிகள் சங்க நிர்வாகி தளபதி கோரிக்கை விடுத்தார். அதை ஏற்று மறைமுக ஏலம் நடத்த கூட்டுறவு சங்க மாவட்ட இணைப்பதிவாளர் பிரபுவுக்கு கலெக்டர் சண்முகம் உத்தரவிட்டார்.

சாலைமறியல்

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று வாழைப்பழம் ஏலம் நடைபெற்றது. கலெக்டரின் உத்தரவின்படி மறைமுக ஏலம் நடத்த முடிவு செய்யப்பட்டு இருந்தது. அப்போது, ஏலத்தில் விலை போகாத வாழைப்பழத்தார்களுக்கு கூட்டுறவு சங்கம் பொறுப்பல்ல என்று அதிகாரிகள் கூறியதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் காலை 11 மணிக்கு வாழைப்பழம் ஏலம் தொடங்கியது. அப்போது மறைமுக ஏலம் நடத்த வியாபாரிகளும், விவசாயிகள் சிலரும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும், கோபிசெட்டிபாளையம்–மொடச்சூர் ரோட்டில் வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் சுமார் 30–க்கும் மேற்பட்டவர்கள் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகாரிகள் சமரசம்

இதுகுறித்து தகவல் அறிந்த கோபிசெட்டிபாளையம் போலீஸ் இன்ஸ்பெக்டர் இளங்கோ மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் மற்றும் விவசாயிகளிடம் சமரச பேச்சுவார்த்தை

நடத்தினார்கள். அப்போது, தனி அலுவலர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதை ஏற்றுக்கொண்ட வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். பிறகு, கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தனி அதிகாரி அகஸ்டின், வியாபாரிகள் மற்றும் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

<u>வழக்கம்போல் ஏலம்</u>

அப்போது, மறைமுக ஏலம் நடத்தும்போது வாழைப்பழங்கள் விற்பனை ஆகவில்லை என்றால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். எனவே, மறைமுக ஏலத்தை கைவிட்டு வழக்கம்போல் நேரடி ஏலத்தை தொடர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். விவசாயிகளின் கோரிக்கை உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும். மேலும் விவசாயிகள்–வியாபாரிகள்– அதிகாரிகள் ஆலோசனை கூட்டம் நடத்தி கருத்துகளை கேட்கும் வரை வழக்கம் போல் நேரடி ஏலம் நடத்தப்படும் என்று உறுதி அளித்ததார்.

அதைத்தொடர்ந்து வழக்கம்போல் ஏலம் நடைபெற்றது. இதில், விவசாயிகள் கொண்டு வந்து இருந்த வாழைப்பழங்களை வியாபாரிகள் ஏலம் மூலம் வாங்கிச் சென்றனர். இந்த சம்பவத்தினால் கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது

**திருப்பூர் மார்க்கெட்டில் மீன் விற்பனை குறைந்ததால் வியாபாரிகள் கவலை**

திருப்பூர்,

திருப்பூர் மார்க்கெட்டில் மீன் விற்பனை குறைந் துள்ளதால் வியாபாரி கள் கவலை அடைந்துள் ளனர்.

<u>4 மாநில மீன்கள்</u>

திருப்பூர் மீன் மார்க்கெட் டுக்கு தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய 4 மாநிலங்களில் இருந்து மீன் விற்பனைக்கு வருகிறது. கடந்த ஒரு மாதமாக இலங்கை கடற் படையினரால் தமிழக மீன வர்கள் தாக்கப்பட்டு, சிறை பிடிக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வந்ததால் தமிழ்நாட்டுக்கு மீன் வரத்து குறைந்துள்ளது. இதனால் கடந்த வாரம் வரை தமிழ்நாட்டில் இருந்து 7டன் மீன், கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலிருந்து தலா4 டன் மீன் என மொத்தம் 19 டன் மீன் மட்டுமே திருப் பூருக்கு விற்பனைக்கு வந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் நேற்று

தமிழ்நாட்டு, கேரள மாநிலத்திலிருந்து தலா 10 டன் மீன், ஆந்திரா, கர்நாடகா மாநிலத்திலிருந்து தலா 5 டன் மீன் என மொத்தம் 30 டன் மீன் விற்பனைக்கு வந்திருந்தது.

வஞ்சரம் மீன் விலை குறைவு

கடந்த வாரத்தை விட சில வகை மீன்களின் விலை குறைந்தும், சிலவகை மீன்கள் விலை அதிகரித்தும் இருந்தது. கடந்த வாரம் ரூ.500க்கு விற்பனை செய்யப்பட்ட வஞ்சரம் மீன் நேற்று ரூ.450க்கும், ரூ.225க்கு விற்கப்பட்ட முறல் மீன் ரூ.250க்கும், ரூ.210க்கு விற்பனை செய்யப்பட்ட சங்கரா மீன் ரூ.220க்கும், ரூ.180க்கு விற்பனை செய்யப் பட்ட அயிலை மீன் ரூ.200க் கும், ரூ.140க்கு விற்பனை செய்யப்பட்ட நெத்திலி ரூ.180க்கும், ரூ.180க்கு விற்பனை செய்யப்பட்ட ஊழி மீன் ரூ.200க்கும், ரூ.200க்கு விற்பனை செய்யப்பட்ட பாறை மீன் ரூ.240க்கும், ரூ.40க்கு விற்பனை செய்யப் பட்ட மத்தி மீன் ரூ.60க்கும், ரூ.180க்கு விற்பனை செய்யப் பட்ட நண்டு ரூ.200க்கும் விற்பனை செய்யப்பட்டது. வஞ்சரம் மீனை தவிர மற்ற அனைத்து வகை மீன்களின் விலையும் அதிகரித்து இருந் தது. ஆனால் மீன்கள் விற் பனை மிகவும் குறைவாகவே இருந்தது. இது குறித்து திருப்பூர் மீன் மொத்த வியாபாரிகள் சங்க நிர்வாகிகளிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:

மீன் விற்பனை குறைவு

பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் வெயில் காலம் தொடங்கி விட்டால் மீன் விற் பனை குறைந்து விடும். அதற்கு காரணம் மக்கள் அசைவ உணவுகளை தவிர்ப்பது தான். மேலும் இன்று(நேற்று) கிருத் திகை தினமாக இருப்பதால் மக்கள் அதிகம் மீன் வாங்க வரவில்லை. கடந்த வார ஞாயிற்றுக்கிழமை சிவராத்திரி என்பதாலும் அன்றும் மீன் விற்பனை கடுமையாக பாதிக் கப்பட்டது. அதே நிலை தான் இன்றும் உள்ளது. இனி கோடை காலம் முடியும் வரை மீன் விற்பனை குறைவாக தான் இருக்கும். இவ்வாறு மீன் மொத்த வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்

**தஞ்சை மாவட்டத்தில் கோடை நெல் சாகுபடி பணிகள் தீவிரம் பம்புசெட் மூலம் இதுவரை 9 ஆயிரம் ஏக்கர் நடவு முடிந்தது**

தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் கோடை நெல் சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தற்போது பம்பு செட் மூலம் இதுவரை 9 ஆயிரம் ஏக்கர் நடவு பணிகள் முடிந்துள்ளன.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை போற்றப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இதில் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதை பொறுத்தே சாகுபடி நடைபெறும். வழக்கமாக குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை ஜூன் மாதம் 12–ந்தேதி திறக்கப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு போதிய தண்ணீர் இல்லாததால் தாமதமாக திறக்கப்பட்டது. இதனால் குறுவை சாகுபடி எதிர்பார்த்த அளவு நடைபெற வில்லை. இதனால் சம்பா சாகுபடி அதிக அளவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சம்பா, தாளடி

இந்த நிலையில் வடகிழக்குப்பருவமழை பொய்த்தாலும், கர்நாடகம் காவிரியில் தண்ணீர் திறந்து விடாததாலும் சம்பா சாகுபடியும் பாதிக்கப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சத்து 2 ஆயிரத்து 939 எக்டேரிலும், தாளடி 19 ஆயிரத்து 3 எக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டது. இதில் போதிய தண்ணீர் இல்லாமல் நெற்பயிர்கள் கருகியது. இதில் 12 ஆயிரத்து 249 எக்டேர் 50 சதவீத்திற்கு மேல் பாதிக்கப்பட்டு உள்ளது என கணக்கிடப்பட்டு பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதம் நிவாரணமும் வழங்கப்பட்டது.

தற்போது சம்பா, தாளடி அறுவடை பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் திடீரென 3 நாட்கள் மழை பெய்ததால் தஞ்சை மாவட்டத்தில் சம்பா, தாளடி அறுவடை பணிகளில் தாமதம் செய்பட்டது. தற்போது தஞ்சை மாவட்டத்தில் 95 சதவீதத்திற்கும் மேல் அறுவடை பணிகள் முடிவடைந்து விட்டன. மீதமுள்ள பகுதிகளிலும் அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தற்போது எக்டேருக்கு 5 ஆயிரம் கிலோ வரை மகசூல் கிடைத்து வருகிறது.

உளுந்து– எள்

அறுவடை செய்யப்பட்ட வயல்களில் தற்போது உளுந்தும் பயிரிடப்பட்டு உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 20 ஆயிரம் எக்டேரில் தற்போது உளுந்து பயிரிடப்பட்டு உள்ளது. மேலும் 500 ஏக்கரில் எள் சாகுபடி நடைபெற்று உள்ளது. மேலும் உளுந்து, எள் சாகுபடி பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. வைக்கோல் விலையும் அதிகரித்துள்ளது. தற்போது கால்நடை வளர்ப்பவர்கள் அதிக விலை கொடுத்து வைக்கோல் வாங்கி வருகிறார்கள்.

கோடை நெல் சாகுபடி

தற்போது தஞ்சை மாவட்டத்தில் கோடை நெல் சாகுபடி பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாள், திருவிடைமருதூர், கும்பகோணம்

பகுதிகளில் பம்புசெட் மூலம் கோடை நெல் சாகுபடி நடவுப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தற்போது இந்த பகுதிகளில் 9 ஆயிரம் ஏக்கர் கோடை நெல் சாகுபடி பணிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

மேலும் கோடை நெல் சாகுபடி பணிகள் திருப்பனந்தாள், கும்பகோணம், திருவிடைமருதூர், தஞ்சை ஒன்றியத்தில் புலவர்நத்தம் பகுதிகளிலும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதற்கான உழவுப்பணிகள் மற்றும் நடவுப்பணிகள் நடைபெற்று வருகின்றன என வேளாண்மைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் இந்த ஆண்டு கூடுதலாக 1 லட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படும் தலைமை நிர்வாகி தகவல்**

தஞ்சாவூர்,

குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் இந்த ஆண்டு கூடுதலாக 1 லட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படும் என்று தலைமை நிர்வாகி தெரிவித்துள்ளார்.

<u>கலந்துரையாடல் கூட்டம்</u>

குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகள் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இதில் விவசாய சங்க பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி தினேஷ்பொன்ராஜ்ஆலிவர் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

நடப்பு 2012–13–ம் ஆண்டு அரவை பருவத்தில் இதுவரை 2 லட்சத்து 80 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்து முடிக்கப்பட்டு உள்ளது. இதற்குரிய கரும்பு கிரயத்தொகை முழுவதும் உடனடியாக கரும்பு சப்ளை செய்த 15 தினங்களுக்குள் பட்டுவாடா செய்யப்பட்டு 7–3–2013 வரை கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விட்டது.

<u>கூடுதலாக 1லட்சம் டன்</u>

தற்போது 2 கரும்பு அறுவடை இயந்திரங்கள் பெரியது. சிறியது இவைகள் மூலம் அறுவடை செய்யப்படும் கரும்பு தினசரி அரவை செய்யப்பட்டு வருகிறது. நடப்பு அரவை பருவத்தில் மேலும் 1 லட்சம் டன்களுக்கு கூடுதலாக நமது ஆலையில் கரும்பு அரவை செய்யப்பட உள்ளது. இதன் மூலம் ஏப்ரல் மாத இறுதி வரை ஆலை தொடர்ந்து இயக்கப்படும். மேலும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்து குறைகளை களைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

வங்கி கடன் வசதி

கூட்டத்தில் தலைமை கரும்பு அலுவலர் சந்திரசேகரன் தொழில்நுட்ப உரை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது:–

அடுத்த ஆண்டு ஆலை அரவைக்கு விவசாயிகள் கரும்பு சப்ளை செய்யும் போது கரும்பு விலை கணிசமாக உயர்ந்து நல்ல விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. தற்போது மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களிலும் கரும்பு நடவு செய்து பயன்பெறலாம். நீடித்த நிலையான நவீன கரும்பு சாகுபடியில் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் கரும்பு நடவு செய்யும் விவசாயிகள் வங்கிகள் மூலம் கடன் வசதி செய்து தரப்படுகிறது. மேலும் வருகிற அரவை பருவத்திற்கு தற்போது நடவுசெய்யும் கரும்பில் 5 அடி பார் இடைவெளியில் இருசால் நடவு செய்து நிலத்தடி சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து அறுவடை இயந்திரம் மூலம் கரும்பு அறுவடை செய்து நல்ல பயன்பெற முடியும். இவ்வாறு அவர் கூறினார். முடிவில் கரும்பு அலுவலர் வெங்கடசாமி நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை சப்பாணி, குமரேசன் ஆகியோர் செய்திருந்தனர்.

**வேதாரண்யம் பகுதியில் விவசாயிகளுக்கு பயிர் நிவாரணத் தொகை காமராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்**

வேதாரண்யம்

வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் தேத்தாக்குடிதெற்கு ஊராட்சி உள்ளிட்ட பகுதிகளில் நெல் சாகுபடி செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு காமராஜ் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி விவசாயிகளுக்கு நிவாரணத்தொகையை வழங்கினார். மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ராஜகுமாரிஅய்யப்பன், ஊராட்சித் தலைவர்கள் கிரிதரன், குஞ்சாலிமரைக்காயர், பழனியப்பன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் சுப்பிரமணியன், நடராஜன், தருமலிங்கம், ராஜசேகரன் உள்பட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், வங்கி செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

**உழவர் பாதுகாப்பு திட்டத்தில் சிறுநீரக நோயாளிகளுக்கு உதவித்தொகை மாவட்ட கலெக்டர் முனுசாமி தகவல்**

நாகப்பட்டினம்

உழவர் பாதுகாப்பு திட்டத்தில் சிறுநீரக நோயாளிகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட உள்ளதாக நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி தெரிவித்துள்ளார்.

சிறுநீரக நோயாளிகள்

நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

நாகை மாவட்டத்தில் சிறுநீரக கோளாறுகளால் பாதிக்கப்பட்ட நோயாளிகள், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் ஆகியோர் அரசு டாக்டரிடம் மருத்துவ சான்று பெற்று முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாதம் ரூ. ஆயிரம் உதவித்தொகை பெற்றுக்கொள்ளலாம்.

<u>விண்ணப்பம்</u>

இந்த திட்டத்தில் பயன் அடைவதற்கு உழவர் பாதுகாப்பு திட்டம் 2011 அடையாள அட்டை அல்லது முதல்–அமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்ட கணக்கெடுப்பு பதிவேட்டின் வரிசை எண்ணுடன் கிராம நிர்வாக அலுவலர் அல்லது உள்வட்ட வருவாய் ஆய்வர் அல்லது சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தார், மாவட்ட கலெக்டர் ஆகியோருக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## எண்ணெய்பனை சாகுபடியில் வருவாய் அதிகம் விவசாயிகள் பயன்பெற வேளாண் அதிகாரி வேண்டுகோள்

திருக்கோவிலூர்,

எண்ணெய் பனை சாகுபடியில் வருவாய் அதிகமாக இருப்பதால் விவசாயிகள் பயன்பெற வேளாண் அதிகாரி வேண்டுகோள் விடுத் துள்ளார். திருக்கோவிலூரை அடுத் துள்ள முகையூர் ஒன்றியத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக் குமார் விடுத்துள்ள செய் திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது:

<u>எண்ணெய்பனை சாகுபடி</u>

நாட்டின் சமையல் எண்ணை தேவையில் உள் நாட்டு உற்பத்தி போதுமான தாக இல்லாததால் ஆண்டுக்கு 50 முதல் 60 லட்சம் டன் சமையல் எண்ணை மலேசியா, இந்தோனேசியா போன்ற வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படு கின்றது. இதில் 60 சதவீதம் பாமாயில் இறக்குமதி செய்யப் படுகின்றது. எனவே நாட்டின் அன்னிய செலா வணியை மிச்சப்படுத்திட விவசாயிகள் தமிழக அரசின் சிறப்பு திட்டமான எண்ணெய்பனை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் எண்ணெய்பனை விவ சாயத்தில் ஈடுபட வேண்டும். இந்த சிறப்பு திட்டத் தினை பொறுத்தவரை

நட்ட 3ம் ஆண்டு முதல் குறைந்தபட்சம் 30 லிருந்து 35 ஆண்டுகள் வரை காய்க்கும் தன்மை உடையது. மாதம் 2 முறை அறுவடை செய்திடலாம்.

சொட்டு நீர் பாசனம்

இதனால் விவசாயிகளுக்கு மாதந்தோறும் வருமானம் கிடைக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் ஒரு எக்டேரில் 6 ஆயிரம் முதல் 8 ஆயிரம் கிலோ பாமாயில் எண்ணை கிடைக்கிறது. மேலும் விவசாயிகளுக்கு அரசு பாமாயில் கன்றுகளை இலவசமாக வழங்குகின்றது.

இதில் முதலாம் ஆண்டு நடவு மானியமாக எக்டேருக்கு ரூ.6 ஆயிரம் மானியமாகவும், முதலாம் ஆண்டு ஊடுபயிர் மானியம் மற்றும் சொட்டு நீர் பாசனம் அமைத்திட எக்டேருக்கு ரூ.15 ஆயிரமும் அரசு வழங்குகின்றது. எனவே இதனை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**உழவர் பாதுகாப்பு திட்டத்தில் ரூ.88 லட்சத்துக்கு நலத்திட்ட உதவிகள் அமைச்சர் பூனாட்சி வழங்கினார்**

மண்ணச்சநல்லூர்,

மண்ணச்சநல்லூரில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் ரூ.88 லட்சத்துக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பூனாட்சி வழங்கினார்.

நலத்திட்ட உதவிகள்

முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மண்ணச்சநல்லூரில் நடந்தது. கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமை தாங்கினார். அரசு கொறடா மனோகரன் முன்னிலை வகித்தார். மாவட்ட வருவாய் அதிகாரி தியாகராஜன் வரவேற்றார்.

அமைச்சர் டி.பி.பூனாட்சி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு 6839 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 40 லட்சத்து 9 ஆயிரத்து 50 மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளும், இந்த ஆண்டு 17 ஆயிரத்து 761 பயனாளிகளுக்கு ரூ.8 கோடியே 53 லட்சத்து 14 ஆயிரத்து 440 மதிப்புள்ள உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த விழாவில் 870 பேருக்கு ரூ.87 லட்சத்து 81 ஆயிரத்து 250 மதிப்புள்ள உதவிகள் வழங்கப்படுகின்றன என்றார்.

பதிவு செய்யலாம்

விழாவில் கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் பேசுகையில், உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 2 வருடங்களுக்கு முன்பு 7¼ லட்சம் உறுப்பினர்கள் இருந்தனர். இப்போது 9¾ லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இன்னும் உறுப்பினர்களாக ஆகாத விவசாயிகள் வி.ஏ.ஓ.விடம் சென்று பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். உறுப்பினர் அட்டை வழங்கப்படாமல் இருந்தாலும் அந்த திட்டத்தின் மூலம் பயன்களை பெறலாம் என்றார்.

விழாவில் அமைச்சர் பூனாட்சி 112 பேருக்கு கல்வி உதவி தொகை, 163 பேருக்கு சார்பு நகர் திருமண உதவித் தொகை, 54 பேருக்கு இயற்கை மரண உதவித் தொகை, 541 பேருக்கு முதியோர் உதவி தொகை பெறுவதற்கான உத்தரவுகளை வழங்கினார். விழாவில் எம்.எல்.ஏ.க்கள் சந்திரசேகர், இந்திராகாந்தி, தாசில்தார் பவானி, தனி தாசில்தார் மலர்கொடி, ஒன்றிய குழு தலைவர் பரமேஸ்வரி முருகன், மாவட்ட ஜெ. பேரவை செயலாளர் ராமு, அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் ஜெயகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இறுதியில், லால்குடி ஆர்.டி.ஓ. பார்த்திபன் நன்றி கூறினார்.

**திருவரங்குளம் அருகே வம்பனில் பயிர் ரகங்கள் பாதுகாப்பு பயிற்சி விவசாயிகளுக்கு பரிசுகள்– சான்றிதழ்கள் வழங்கப்பட்டன**

திருவரங்குளம்

திருவரங்குளம் அருகே வம்பனில் விவசாயி களுக்கு பயிர் ரகங்கள் பாதுகாப்பு பயிற்சி முகாம் நடந்தது. இதில் சிறந்த முறையில் சாகுபடி செய்த 23 விவசாயிகளுக்கு பரிசு கள் – சான்றிதழ்கள் வழங் கப்பட்டன.

**விழிப்புணர்வு பயிற்சி**

திருவரங்குளம் அருகே வம்பனில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில், தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையம், வேளாண் அறிவியல் நிலையம், கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து நடத்திய பயிர் ரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது.

பயிற்சியில் வேளாண் பல்கலைக்கழக தனி அலுவலர் ராமமூர்த்தி கலந்து கொண்டு, குத்து விளக்கேற்றி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

**வளங்கள் அபகரிப்பு**

1960–70–ம் ஆண்டுகளில் நெல், கோதுமையில் ஒரு பசுமை புரட்சி ஏற்பட்டது. இதனால் உற்பத்தி பன்மடங்கு உயர்ந்தது. தற்போது நம் நாட்டில் எண்ணற்ற வளங்கள் இருந்தபோதும், அவற்றை

நாம் போற்றி பாதுகாக்க தவறிவிட்டதால், இன்றைக்கு நமது வளங்களை வெளிநாட்டினர் அபகரித்து கொண்டு, அவர்களுக்கு நாம் காப்புரிமை செலுத்த வேண்டியது உள்ளது.

குறிப்பாக நமது நாட்டு வேப்ப மரம். அதற்கு அமெரிக் கா காப்புரிமை பெற்றுள் ளனர். மேலும் நமது நாட்டு பாசுமதி அரிசி என நம் நாட்டு வளங்களை, அன்னியர்கள் அபகரித்துள்ளனர்.

**காப்புரிமை**

எனவே விவசாயிகள், நம் முன்னோர்கள் விட்டு சென்று ள்ள பாரம்பரிய விதை களை பாதுகாத்தும், காப்புரிமை பெறவும் விழிப் புணர்வு பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயி கள் கண்டுபிடிப்புகளை வே ளாண் மையத்திற்கு கொண்டு வந்து, காப்புரிமை பெற முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக கோவை வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் பாஸ்கரன் வர வேற்று பேசினார். தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய தலைவர் வைரவன், வேளா ண்மை அறிவியல் தலைவர் கீதா ஆகியோர் பேசினர்.

**பரிசுகள்– சான்றிதழ்கள்**

இந்த நிகழ்ச்சியில் விவசாயத் தில் சிறந்த முறையில் சாகுபடி செய்த 23 விவசாயிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில் விவசாயிகள், தாங்கள் விளை வித்த வேளாண் பொருட் களை கண்காட்சியாக வைத்தி ருந்தனர்.

## புதுக்கோட்டையை வறட்சி மாவட்டமாக அறிவித்து ஜெயலலிதா, விவசாயிகளின் துயர் துடைத்துள்ளார் வைரமுத்து எம்.எல்.ஏ. பேச்சு

அரிமளம்

புதுக்கோட்டை மாவட் டத்தை வறட்சி மாவட்ட மாக அறிவித்து தமிழக முதல்–அமைச்சர் ஜெய லலிதா, விவசாயிகளின் துயர் துடைத்து உள்ளார் என்று வைரமுத்து எம்.எல்.ஏ. கூறினார்.

**விலையில்லா பொருட்கள் வழங்கும் விழா**

அரிமளம் ஒன்றியத்தை சேர்ந்த, துறையூர் ஊராட்சிக்கு உட்பட்ட கீரணிப்பட்டி கிராமம் உள்ளிட்ட 2 இடங்களில் பயனாளிகளுக்கு விலையில்லா பொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்செல்வி சாத்தன் தலைமை தாங்கி னார்.

மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சந்திரன், ஒன்றி யக்குழு தலைவர் கணே சன், திருமயம் தாசில் தார் பிரதாபகரன், ஒன்றிய செயலா ளர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**5 ஆயிரத்து 608 பயனாளிகள்**

விழாவில் திருமயம் எம்.எல்.ஏ. வைரமுத்து கலந்து கொண்டு, 330 பயனாளிகளுக்கு விலையில்லா பொருட்கள் வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

தேர்தல் நேரத்தில் முதல்– அமைச்சர் ஜெயலலிதா அறிவித்த அனைத்து திட்டங் களையும் செயல்படுத்தி, நிறைவேற்றி வருகிறார். கடந்த ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 7 ஆயிரம் பெண்களுக்கு திருமண உதவித்தொகை வழங்கப்பட்டு உள்ளது. பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு 14 வகையான நலத்திட்டங்கள் செயல் படுத்தப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட் டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, ஜெயலலிதா விவ சாயிகள் துயர் துடைத்து உள்ளார். அரிமளம் ஒன் றியத்தில் கடந்த ஆண்டு 44 கிராமங்களில் வசிக்கும் 5 ஆயிரத்து 608 பயனாளிகளுக்கு விலையில்லா பொருட்கள் வழங்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு தொடர்ந்து விலை யில்லா பொருட்கள் வழங்கப் பட்டு வருகிறது.

**படிப்படியாக வழங்க உத்தரவு**

கடந்த 30.06.2011–க்கு முன்னர் ரேஷன் கடைகளில் அரிசி வாங்கிய அனைத்து கார்டுகளுக்கும் விலையில்லா பொருட்கள் வழங்கப்படும். குறைந்த குடும்ப அட்டை உள்ள ரேஷன் கடைகளில் இருந்து அதிக குடும்ப அட்டை உள்ள ரேஷன் கடை வரை, படிப்படியாக விலை யில்லா பொருட்கள் வழங்க ஜெயலலிதா உத்தரவிட்டுள் ளார். இவ்வாறு அவர் பேசி னார்.

**கலந்து கொண்டவர்கள்**

விழாவில் ஒன்றிய விவ சாய அணி செயலாளர் பெருமாள், வருவாய் ஆய் வாளர் நடராஜன், கிளை செயலாளர் முருகன், மணி முத்து, கே.புதுப்பட்டி முரு கன், குமார், ஊராட்சி மன்ற துணைத்தலைவர் கண் ணையா, குமரேசன், ஊராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் பெருமாள், ஊரா ட்சி செயலாளர் சிதம்பரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

அரியலூர்

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

அரியலூர் மாவட்ட கலெக்டர் கூட்ட அரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடை பெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் ரவிக் குமார் தலைமை தாங்கி பேசிய தாவது:–

நமது மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை 954 மிமீ. 2012–ம் ஆண்டு 678 மிமீ மழை பெறப்பட்டுள்ளது. சராசரி மழையை விட 276 மிமீ குறைவாக பெறப் பட்டுள் ளது. இந்த ஆண்டு மார்ச் மாதம் 7.5 மி.மீ வரை மழை பெறப்பட்டுள்ளது.

**நெல் சாகுபடி**

நெல் சாகுபடி இயல்பான பரப்பு 25 ஆயிரம் எக்டர் ஆகும். கடந்த ஆண்டு 27 ஆயிரத்து 400 எக்டர் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதுவரை 17 ஆயிரத்து 100 எக் டரில் சாகுபடி செய்யப் பட் டுள்ளது.

சிறுதானியங்கள் 16 ஆயி ரத்து 930 எக்டர் பரப்பிலும் பயிறுவகை பயிர்கள் 2 ஆயி ரத்து 900 எக்டரிலும் பருத்தி 8 ஆயிரத்து 100 எக்டரிலும் கரும்பு 8 ஆயிரத்து 15 எக்டரி லும் எண்ணெய் வித்து 10 ஆயி ரத்து 681 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**தேவையான இருப்பு**

குறுவை பருவத்திற்கு ஏற்ற ஆடுதுறை 36, ஆடுதுறை 45 ஆகிய விதைகள் தேவையான அளவு இருப்பு உள்ளது. நன் செய் தரிசில் உளுந்து சாகுபடி செய்ய 5 டன் விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

உரங்கள் யூரியா 375 மெ.டன், டிஏபி 225 மெ.டன், பொட்டாஷ் 145 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் 395 மெ.டன் தேவையான அளவு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் விற்பனை மையங் களில் இருப்பு உள்ளது.

**குறைந்த நீர்**

வறட்சி காரணமாக நீண்ட கால வயதுடைய பயிர் சாகு படி செய்யமுடியாத நிலையில், இருக்கும் குறைந்த நீரை பயன் படுத்தி அதிக மகசூல் மற்றும் வருவாய் பெற்றிட குறைந்த கால வயதுடைய உளுந்து பயிர் பயிரிடலாம்.

உளுந்து பயறு உற்பத்தி அதிகரிக்க தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தீவிர பயறு உற்பத்தியில் 300 எக்டர் அரியலூர் மாவட் டத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இந்த திட்டத்தில் எக்டருக்கு ரூ.4 ஆயிரத்து 800 மதிப்புள்ள இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப் பட்டு வருகின்றது. தேவைப் படும் விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண்மை விரி வாக்க மையங்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

**கலந்து கொண்டவர்கள்**

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கருப்ப சாமி, இணை இயக்குநர் (வேளாண்மை) குணசேகரன், துணை இயக்குநர் (தோட்டக் கலைத்துறை) சுப்பையா, .உலகநாதன், செங்கமுத்து, .ஜெயசந்திரன், ராகவேந்திரன், பிச்சைபிள்ளை, அம்பேத் கார் வலியன், மணி ஆகிய விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அரசுத்துறை அலு வலர்கள் பலர் கலந்து கொண் டனர்.

**திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரண உதவி கலெக்டர் தகவல்**

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரண உதவி வழங்கப்படும் என்று கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் குழு ஆய்வு

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பருவமழை பொய்த்து போனது. இதன் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன. இதனை தொடர்ந்து விவசாயிகள் மீது அக்கறை கொண்டு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர்கள் ஆர்.விசுவநாதன், கே.பி.முனுசாமி, ஆர்.வைத்தியலிங்கம், எஸ்.தாமோதரன், தோப்பு என்.டி.வெங்கடாசலம் ஆகிய 6 அமைச்சர்கள் கொண்ட குழுவை முதல்–அமைச்சர் நியமித்துள்ளார். இந்த குழுவினர் திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று முன்தினம் ஆய்வு செய்தனர்.

நிவாரண உதவி

இந்த குழுவினர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளையும் பார்வையிட போதிய கால அவகாசம் இல்லாமல் போயிற்று. எனவே மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட 2 இடங்களை தேர்வு செய்து பார்வையிட்டனர். அந்த பகுதியில் உள்ள விவசாயிகளிடம் வறட்சி குறித்தும், பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்தும் கேட்டு அறிந்தனர்.

இந்த ஆய்வின் போது அமைச்சர்கள் குழுவிடம், மாவட்ட நிர்வாகம் சார்பில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் விவரம் மற்றும் பாதிக்கப்பட்ட நெல், சிறு தானியங்கள், பயிறு வகைகள், எண்ணெய் வித்துகள், கரும்பு, பருத்தி ஆகிய பயிர்களின் சேதம் மற்றும் அதன் மதிப்பு குறித்து புகைப்படங்களுடன் கூடிய தகவல் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண உதவி வழங்கப்பட இருக்கிறது.

இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

**சத்திரப்பட்டி பகுதியில் சின்னவெங்காயம் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**

சத்திரப்பட்டி,

சத்திரப்பட்டி பகுதியில் சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

<u>சின்ன வெங்காயம்</u>

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாலுகா சத்திரப்பட்டி, தாசரிபட்டி, புதுக்கோட்டை, விருப்பாட்சி, வீரலப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, 16 புதூர் மற்றும் தேவத்தூர் பகுதிகளில் அதிக அளவில் சின்ன வெங்காயம் நடவு செய்யப்பட்டு அறுவடை நடைபெற்று வருகிறது. சத்திரப்பட்டி பகுதியில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததன் காரணமாக இங்குள்ள கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் மிகக்குறைந்து காணப்படுகிறது. இதை பயன்படுத்தி இந்த பகுதி விவசாயிகள் சின்ன வெங்காயம், மிளகாய், காலபிளவர் போன்ற காய்கறி பயிர்களை பயிரிட்டு வருகின்றனர்.

<u>விளைச்சல் குறைவு</u>

இதன் காரணமாக சின்ன வெங்காயம் விளைச்சல் மிகக்குறைவாக உள்ளது. பொதுவாக எந்த ஒரு விவசாய பயிரும் விளைச்சல் அதிகரித்தால் விலை குறையும். விளைச்சல் குறைந்தால் விலை உயரும் என்பது அடிப்படை. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக விவசாய பொருட்கள் விளைச்சல்

குறைவு ஏற்பட்டும், விலை உயராமல், விலை வீழ்ச்சி காரணமாக அனைத்து விவசாய பொருட்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

விலை வீழ்ச்சி

கடந்த மாதம் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் 10 கிலோ சின்ன வெங்காயம் ரூ.330–க்கு மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது 10 கிலோ சின்ன வெங்காயம் ரூ.250 முதல் ரூ.280 வரை மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் இருந்து கேரளா மற்றும் தமிழகம் முழுவதும் சின்ன வெங்காயம் அனுப்பப்படுகிறது.

**கல்வி நிறுவனங்களில் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்ப படிப்புகளுக்கு ரூ.75 லட்சம் மானியம்**

**வேளாண் வணிகத்துறை அதிகாரி தகவல்**

தேனி

உணவுப் பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான படிப்புகளை தொடங்க ரூ.75 லட்சம் மானியம் வழங்கப் படுவதாக வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் ரெங்கநாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

**உணவு பதப்படுத்துதல்**

மத்திய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் திட்டங்களை மாநில அரசுகள் மூலம் செயல்படுத்தும் வகையில் தேசிய உணவு பதப்படுத்தும் இயக்க திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கவும், ஏற்கனவே அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளை மேம் படுத்த மற்றும் தளவாட பொருட்கள் வாங்க 25 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

நவீன அரிசி ஆலைகள், பயறு ஆலைகள், எண்ணை தயாரிப்பு தொழிற்சாலைகள், பழங்கள், காய்கறிகளை மதிப்பு கூட்டும் தொழிற்சாலைகள் போன்றவற்றிற்கு இந்த மானியம் வழங்கப்படுகிறது.

தோட்டக்கலை பயிர்கள் அல்லாத பொருட்களை பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் குளிர்பதன வசதி, பயிர்களை எடுத்துச்செல்ல குளிரூட்டப் பட்ட வாகனம் வாங்குதல் போன்றவற்றிற்கு 50 சதவீதம் மானியம் வீதம் அதிகப்பட்சமாக ரூ.10 கோடி வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

**தொழில்நுட்ப படிப்பு**

கல்வி நிறுவனங்களில் உணவு பதப்படுத்தும் தொழில் நுட்பம் தொடர்பான பட்டம் அல்லது பட்டயப்படிப்பு தொடங்குவதற்கு, புத்தகம், பரிசோதனைக்கூட கருவிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளுக்கு அதிகப்பட்சமாக ரூ.75 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது. தொழில் முனைவோர் பயிற்சிக்கு ரூ.2 லட்சம் நிதி உதவி வழங்கப்படுகிறது.

எனவே மானியம் பெற்று தொழில் தொடங்கவும், தொழிலை மேம்படுத்தவும் விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் மூலமாக மாநில இயக்க இயக்குனருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பெரியகுளம் பகுதியில் பரவலாக பெய்த மழையால் மா பூக்கள் சேதம் விவசாயிகள் வேதனை

பெரியகுளம்

பெரியகுளம் பகுதியில் பரவலாக பெய்த மழையால் மா மரங்களில் பூக்கள் உதிர்ந்து சேதம் அடைந்தன. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

**மா விவசாயம்**

தேனி மாவட்டம், பெரிய குளம் சுற்றுவட்டார பகுதிகளான சோத்துப்பாறை, கும்பக்கரை, வாலாட்டி, முருகமலை, சின்னாம்பாளையம், மணக்காடு, கோவில்காடு, தொண்டகுத்தி, சிரக்காடு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மா விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

இங்குள்ள தோட்டங்களில் மல்கோவா, பங்கணபள்ளி, காளைப்பாடி, செந்தூரம், காதர், அல்போன்சா, கல்லாமை, காசாரகம் உள்ளிட்ட பல்வேறு ரக மாங்காய் கள் விளைச்சல் ஆகின்றன. தற்போது காசா ரக மா மரங்களில் மட்டும் பூக்கள் பூத்து வருகின்றன. மற்ற வகை மாமரங்களில் பூக்கள் பூத்து காய்கள் பிடித்துள்ளன.

**விவசாயிகள் கவலை**

இந்நிலையில் பெரியகுளம் பகுதியில் அவ்வப்போது மழை பெய்து வருவதால் மரங் களில் பூத்து இருந்த பூக்கள் உதிர்ந்தும், அழுகியும் சேதம் அடைந்துள்ளன. காசா ரக மாங்காய்கள் இந்த பகுதிகளில் அதிக அளவில் விளைச்சல் ஆகும். தற்போது காசா ரக மரங்களில் இருந்த பூக்கள்

உதிர்ந்ததால் விவசாயிகள் மிகவும் வேதனை அடைந்து உள்ளனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விளைச்சல் மிகவும் குறைவாக இருக்கும் என்றும் தெரிவித்தனர்.

இது குறித்து விவசாயி எம்.ஜி.ராஜா கூறும்போது, 'தற்போது பெய்து வரும் மழையால் மா விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு உள் ளது. காசா ரக மா மரங்களில் பூக்கள் சேதம் அடைந்து வருகின்றன. தொடர்ந்து மழை பெய்து வந்தால் மேலும் சேதம் அடைய வாய்ப்பு உள்ளது. இருந்த போதிலும் பிற ரக மாங்காய்கள் நல்ல விளைச்சல் ஏற்படும் என்று தெரிகிறது' என்றார்.

**நிலமற்ற ஏழை விவசாயிக்கு அரசால் வழங்கப்பட்ட நிலத்தை அளந்து கொடுக்க, ஐகோர்ட்டு உத்தரவு**

மதுரை

திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுகா டி.எடையப்பட்டியை சேர்ந்தவர் பொன்னாத்தாள். இவர், மதுரை ஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறி இருப்பதாவது:–

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம் கடந்த 2006–ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 2007–ம் ஆண்டு டி.எடையப்பட்டி கிராமத்தில் எனக்கு ஒரு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இதற்கு, மணப்பாறை தாசில்தார் பட்டா வழங்கி உள்ளார். நானும், அந்த நிலத்துக்கு வரி செலுத்தி உள்ளேன். ஆனால், இதுவரை நிலத்தை அளந்து கொடுக்கவில்லை. இதனால் தனிநபர்கள் சிலர், அந்த இடத்தை ஆக்கிமிக்க முயற்சித்து வருகின்றனர். அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக, ஏழை மக்களுக்காக கொண்டு வரப்பட்டுள்ள திட்டம் பாழாகி வரும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு எனக்கு வழங்கிய நிலத்தை அளந்து கொடுக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதி கே.கே.சசிதரன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வக்கீல் ஏ.வடிவேல் ஆஜராகி வாதாடினார். மனுவை விசாரித்த நீதிபதி, வருகிற 28–ந் தேதிக்கு முன்னதாக மனுதாரருக்கு அரசால் வழங்கப்பட்ட நிலத்தை அளந்து கொடுக்க வேண்டும் என்று மணப்பாறை தாலுகா சர்வேயருக்கு உத்தரவிட்டார்.

**மழை இல்லாமல் போனதால் வாடிய பயிர்களை அமைச்சர்கள் பார்வையிட்டனர் இழப்பீடு கேட்டு விவசாயிகள் மனு**

மதுரை

மழை இல்லாமல் போனதால் மதுரை மாவட்டத்தில் வாடிய பயிர்களை தமிழக அமைச்சர்கள் பார்வையிட்டனர். இழப்பீடு கேட்டு அவர்களிடம் விவசாயிகள் மனு கொடுத்தனர்.

<u>மானாவாரி பயிர்கள்</u>

தமிழகத்தில் கடந்த ஆண்டு போதிய மழை இல்லாமல் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் அமைச்சர்கள் நத்தம் விசுவநாதன், தாமோதரன், வைத்தியலிங்கம், தோப்பு வெங்கடாசலம், முனுசாமி, செல்லூர் ராஜூ உள்ளிட்ட குழுவினர் நேற்று மதுரை வந்தனர்.

திருமங்கலம் தாலுகா கள்ளிக்குடி ஒன்றியம் மையிட்டான்பட்டி கிராமத்திற்கு வந்த அவர்களை கலெக்டர் அன்சுல்மிஸ்ரா, எம்.எல்.ஏ.க்கள் முத்துராமலிங்கம், அண்ணாத்துரை ஆகியோர் அழைத்துச்சென்றனர். கிராமத்தின் நுழைவு பகுதியில் மானாவாரி பயிர்கள் விளையும் கரிசல்காட்டு பகுதிகளை பார்வையிட்டனர்.

<u>தரம் உயர்த்த வேண்டும்</u>

அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் குறைகளை கேட்ட அமைச்சர்கள் அது தொடர்பான மனுக்களை பெற்றனர். இதில் மையிட்டான்பட்டி பஞ்சாயத்து தலைவர் நாகசுந்தரி, கொடுத்த மனுவில் ‘‘ பெரிய கண்மாய், இலுப்பகுளம் கண்மாய்கள் மூலம் 270 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. தற்போது போதிய மழை இன்மையால் மொத்த நிலத்திலும் விவசாயம் செய்ய முடியாமல் போனது. இந்த பகுதியில் நெற்பயிர்களை அடிக்க சிமிண்டு களம் அமைத்துக்கொடுக்க வேண்டும். கிராமத்தில் உள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும். அங்கன்வாடி மையத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டும்’’ என்று கூறப்பட்டு இருந்தது.

மொட்டையன் என்ற விவசாயி 2 ஏக்கர் நிலத்தில் நிலக்கடலை பயிர் செய்திருந்தார். மழை இல்லாமல் போனதால் விளைச்சல் பாதிக்கப்பட்டதாக கூறி இழப்பீடு வழங்கக்கோரி அமைச்சர்களிடம் மனு கொடுத்தார். இதேபோல 50–க்கும் மேற்பட்டவர்கள் மனுக்களை கொடுத்தனர்.

<u>11 ஆயிரம் ஹெக்டேர்</u>

அமைச்சர்களுடன் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் மகாலிங்கம், தமிழ் அழகன், மாவட்ட வக்கீல் பிரிவின் செயலாளர் தமிழ்ச்செல்வம், முன்னாள் மாவட்ட செயலாளர் ஜெயராமன், தொகுதி செயலாளர் ஆண்டிச்சாமி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

இதனை தொடர்ந்து ஆண்ணாத்துரை எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது:–

மதுரை மாவட்டத்தில் 39 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலம் உள்ளது. இதில் 13 ஆயிரம் ஹெக்டேரில் விவசாயம் செய்யப்பட்டது. அதில் 11 ஆயிரம் ஹெக்டேர் நிலம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மானாவாரி நிலத்திலும் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகளுக்கு ரூ.25 ஆயிரமும், விவசாய தொழிலாளர்களுக்கு ரூ.10 ஆயிரமும் தமிழக அரசு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>பருத்தி</u>

பின்னர் அமைச்சர்கள் குழுவினர் டி.கல்லுப்பட்டியை அடுத்த காடனேரி பகுதிக்கு சென்றனர். அங்கு பருத்தி சாகுபடி செய்திருந்த கணபதி என்பவரிடம் ஒரு ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி செய்ய ஆகும் செலவுத்தொகை, அதில் கிடைக்கும் வருமானம் குறித்து அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் கேட்டார்.

அதற்கு ஒரு ஏக்கர் நிலத்தில் 5 குவிண்டால் பருத்தி கிடைக்கும் என்று கூறிய கணபதி, அவர் சாகுபடி செய்திருந்த 14 ஏக்கர் நிலத்தில் தண்ணீர் இல்லாமல் விளைச்சல் இல்லை என்றும் கூறினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் பேரையூர் தாலுகா நிர்வாகி முருகன், அமைச்சர்களிடம் ஒரு மனு கொடுத்தார். அதில் மதுரை மாவட்டத்தில் 3 ஆயிரம் ஏக்கர் நெல் உள்பட கரும்பு, பருத்தி, சோளம் என்று அனைத்து பயிர்களும் கடும் பாதிப்பு அடைந்துள்ளதாகவும், எனவே நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் கூறப்பட்டு இருந்தது. இதைத்தொடர்ந்து அமைச்சர்கள் அனைவரும் மதுரை புறப்பட்டு சென்றனர்.

**பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் வறட்சிநிவாரண குழுவிடம் விவசாயிகள் மனு**

சிவகங்கை,

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப் பட்ட பயிர்களுக்கு பயிர் கடனை முழுமையாக தள் ளுபடி செய்ய வேண்டும் என்று வறட்சிநிவாரண குழுவிடம் விவசாயிகள் மனு அளித்துள்ளனர்.

<u>நஷ்ட ஈடு</u>

தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் தமிழக அமைச்சர் மற்றும் அதிகாரிகளை கொண்ட உயர் மட்டகுழு சிவகங்கை மாவட் டத்தில் வறட்சி பகுதிகளை பார்வையிட்டனர். அப்போது, இந்த குழுவிடம் தமிழ்நாடு விவசாய சங்க மாநில தலைவர் குணசேகரன், மாவட்ட தலை வர் கலையரசன் ஆகியோர் கொடுத்துள்ள மனுவில் கூறியி ருப்பதாவது:–

சிவகங்கை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக விவசாயிகளுக்கு ஏக்கருக்கு நஞ்சை நிலத்திற்கு ரூ.15 ஆயிரமும், புஞ்சை நிலத் திற்கு ரூ.10ஆயிரமும், மிளகாய் பயிருக்கு ரூ.25 ஆயிரமும் வழங்க வேண்டும். கால்நடை விவசாயிகளுக்கு விலையில் லாமல் கால்நடை தீவனம் வழங்கவேண்டும். குடிநீருக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள் ளதால் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்.

கடந்த வறட்சிகாலத்தில் அமைக்கப்பட்ட 350 சமுதாய கிணறுகளை மராமத்து செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும். கிரா மத்து ஊரணிகளை சீர்படுத்தி கம்பி வேலியிட்டு குடிநீர் வழங்க வேண்டும். பண்ணை குட்டை வெட்ட கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 15 கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். இவ் வாறு அந்த மனுவில் கூறியிருந் தனர்.

<u>விவசாய சங்கத்தினர் மனு</u>

இதே போல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகட்சி சார்பில் அதன் மாவட்ட செயலாளர் கந்தசாமி மற்றும் தமிழ்நாடு விவ சாய சங்க மாவட்ட தலை வர் மாணிக்கம், செயலாளர் ஆதிமூலம் ஆகியோர் கொடுத் துள்ள மனுவில், விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் நிவாரணமாக ரூ.10 ஆயி ரம் வழங்க வேண்டும். வேலையின்றி வெளியூர் செல் வதை தவிர்க்க மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 250 நாட்கள் வேலைவழங்கிட வேண்டும். இதேபோல் மானாவாரி பயிர் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும், தோட்டகலை பயிர்களுக்கு ரூ.40ஆயிரமும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கூறியிருந்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கொடுக்கப் பட்டுள்ள மனுவில், பயிர் கடனை முழுமையாக தள்ளு படி செய்து பயிர் பாதிப்புக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். தண்ணீர்இல்லா மல் பயிரிடப்படாத நிலங் களுக்கும் இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்றுகூறியி ருந்தனர். சிவகங்கை ஒன்றிய விவசாய சங்க தலைவர் இக்னேஷியஸ் கொடுத்துள்ள மனுவில், விவ சாயிகள் வாங்கிய வங்கி கடனை தள்ளுபடி செய்ய வேண் டும் என்று கூறியிருந் தார்.

மேலும் சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட கரும்பு உற்பத்தி யாளர் சங்கத் தின் சார்பில் செயலாளர் ரகு நாதன், உடையப்பன் மற்றும் நிர்வாகிகள் கொடுத் துள்ள மனுவில், சிவகங்கை,

ராமநாத புரம் மாவட்டத்தில் 17 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிரி டப் பட் டுள்ளது. இந்தஆண்டு தண் ணீர், மின்சாரம் பற்றாக் குறை யால் நஷ்டம் ஏற்பட் டுள்ளது. எனவே ஏக்கருக்கு ரூ.25 ஆயி ரம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கூறி யிருந்தனர்.

இதே போல் தமிழ்நாடு வரு வாய்துறை அலுவலர் சங்கத் தின் சார்பில் மாவட்ட தலை வர் மகேந்திரன் தலைமையில், அதன் நிர்வாகிகள் அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் கொடுத் துள்ள மனுவில், சிவகங்கை மாவட்டத்தில் 9 தாசில்தார் பணியிடம் காலி யாக உள்ளது. இங்கு ஏற்கனவே 15 பணியிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே காலியான இடங்களை பூர்த்தி செய்ய வேண்டும். அத்துடன் சிவகங்கையில் தாலுகா அலு வலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் பணி பாதியில் நிற்கி றது. அதை மீண்டும் தொடங்கி முடிக்க வேண்டும். திருப்பத் தூரில் கட்டி முடிக்கப்பட்டுள்ள தாலுகா அலுவலக கட்டி டத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும் என்று அந்த மனுவில் கூறி யிருந்தனர்.

**ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் வறட்சி பாதித்த பகுதிகளில் நிவாரண குழு ஆய்வு அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர்கள் வந்தனர்**

ராமநாதபுரம்

ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் அமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் வறட்சி நிவாரண உயர்மட்ட குழு ஆய்வு செய்தது.

ஜெயலலிதா உத்தரவு

தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால் நெல் விவசாயம் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சென்னை தவிர அனைத்து மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இதைத்தொடர்ந்து நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வறட்சி நிவாரண உயர்மட்ட குழு நேரில் சென்று ஆய்வு செய்ய முதல்–அமைச்சர் உத்தரவிட்டார்.

இதன்படி வறட்சி நிவாரண உயர்மட்ட குழு தலைவர் நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர்கள் நத்தம் விசுவநாதன், முனுசாமி, வைத்தியலிங்கம், தாமோதரன், வெங்கடாசலம் ஆகியோர் நேற்று ராமநாதபுரம் மாவட்டம் வந்தனர்.

தண்ணீருக்கு பணம்

நயினார்கோவில் யூனியனுக்கு உட்பட்ட அரியாங்கோட்டை, ஆர்.எஸ்.மங்கலம் அருகே உள்ள சோழந்தூர் பகுதியிலும் நாரணமங்கலம், எருமைபட்டி, முத்துசாமிபுரம் பகுதிகளிலும் வறட்சி பாதிப்புகளை அமைச்சர்கள் குழுவினர் ஆய்வு செய்தனர்.

அப்போது விவசாயிகளிடம் பாதிப்பு குறித்து கேட்டறிந்தனர். விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை அமைச்சர்கள் பெற்றுக்கொண்டனர். திருவாடானை தாலுகாவில் பருவமழை பொய்த்துப்போனதால் ஒரு லாரி தண்ணீர் ரூ.900 வீதம் செலவழித்து பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சியும், செலவு செய்த தொகை கிடைக்கவில்லை என்று விவசாயிகள் அமைச்சர்கள் குழுவிடம் கூறினர்.

பண்ணைகுட்டை

அமைச்சர்களிடம் மாவட்ட கலெக்டர் நந்தகுமார் கூறியதாவது:– மாவட்டத்தில் மொத்தம் 1 லட்சத்து 31 ஆயிரம் எக்டேர் பாசன பரப்பில் இந்த ஆண்டு 1 லட்சத்து 19 ஆயிரம் எக்டேரில் விவசாய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 50 சதவீதத்துக்கு மேல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் திருவாடானை தாலுகாவில் 38 ஆயிரம் எக்டேர் முழுமையாக பாதிக்கப்பட்டு விட்டது. ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியை சமாளிக்கும் வகையில் பண்ணைகுட்டைகள் அமைக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி மாவட்டத்தில் 5 ஆயிரம் பண்ணைகுட்டைகள் அமைக்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் தேங்கும் தண்ணீரை பயன்படுத்தி பாதிப்பு இல்லாமல் நெல் விவசாயம் மேற்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

புகைப்பட கண்காட்சி

இதுகுறித்து ஆய்வு அறிக்கையை முதல்–அமைச்சரிடம் வழங்குவதாக அமைச்சர்கள் தெரிவித்தனர். அவர்களுடன் அமைச்சர் சுந்தர்ராஜ், முன்னாள் அமைச்சர் அன்வர்ராஜா, மாவட்ட செயலாளர் ஆணிமுத்து, மாவட்ட துணைசெயலாளர் முனியசாமி, முருகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சித் தலைவர் சுந்தரபாண்டியன், ஒன்றிய செயலாளர் ஆனந்த், நகரசபை தலைவர் பொறுப்பு கவிதா சசிக்குமார், மாவட்ட வருவாய் அதிகாரி விசுவநாதன், ஆர்.டி.ஓ.க்கள் லாரன்ஸ், குணாளன் ஆகியோர் உடன் சென்றனர். பின்னர் செய்திமக்கள் தொடர்பு துறை சார்பில் அமைக்கப்பட்டு இருந்த அரசு புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

சிவகங்கை

சிவகங்கை மாவட்டத்தில் அமைச்சர்கள் ஆய்வுக்குழுவுடன் கூடுதல் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையாளர் பீட்டர், வருவாய் துறை முதன்மை செயலர் ராஜீவ் ரஞ்சன், உள்ளாட்சி துறை செயலர் சங்கர், வேளாண்மை துறை இயக்குனர் ராஜேந்திரன், தோட்டக்கலை செயலாளர் சத்தியபிரகாஷ் தாகூர், கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் பழனிச்சாமி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் பனிந்தரரெட்டி, கலெக்டர் ராஜாராமன், போலீஸ் சூப்பிரண்டு சக்திவேல், கூடுதல் கலெக்டர் கிரண்குராலா, மாவட்ட வருவாய் அதிகாரி தனபால் ஆகியோர் வந்தனர். அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் முருகானந்தம், மாவட்ட ஊராட்சி தலைவர் சிவதேவ்குமார் மற்றும் அ.தி.மு.க.வினர் வரவேற்றனர்.

<u>புகார் மனுக்கள்</u>

பின்னர் இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மற்றும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் மனுக்கள் கொடுக்கப்பட்டன. மனுக்களை பெற்று கொண்டு நிதி அமைச்சர் பன்னீர்செல்வம் பேசியதாவது:– காவிரி டெல்டா பகுதியில் சுற்றுபயணம் செய்து முதல்–அமைச்சரிடம் அறிக்கை கொடுத்தோம். தற்போது மாவட்டங்கள் தோறும் சுற்றுபயணம் செய்து வறட்சி நிலையை பார்வையிட்டு அறிக்கை தரும்படி முதல்–அமைச்சர் கூறியுள்ளார். தற்போது சிவகங்கை மாவட்டத்திலும் வறட்சிபகுதியை பார்வையிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் எஸ்.குணசேகரன் (சிவகங்கை), எம்.குணசேகரன் (மானாமதுரை), சோழன் சித. பழனிச்சாமி (காரைக்குடி) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் இந்தகுழுவினர் சிவகங்கையை அடுத்த செம்மனூர் மற்றும் தட்சனேந்தல் ஆகிய இடங்களில் வறட்சிகாரணமாக விளைநிலங்கள் கருகி கிடப்பதை நேரில் சென்று பார்வையிட்டனர்.

**தினகரன்**

**கடல் போல் தண்ணீர் சூழ காட்சியளித்த நிலைமாறி விவசாய நிலமாக மாறி வருகிறது மேட்டூர் அணை**

கடல் போல் தண்ணீர் சூழ காட்சி அளித்த மேட்டூர் அணை விவசாய நிலம் போல் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு பச்சை, பசேல் என காட்சி அளிக்கிறது.

மேட்டூர் அணை

பருவமழை காலத்தில் பெய்யும் மழை நீரை சேமித்து வைத்து குடிநீர் மற்றும் பாசனதேவையை பூர்த்தி செய்வதற்காக 1934–ம் ஆண்டு மேட்டூர் அணை கட்டப்பட்டது. 120 அடி வரை தண்ணீரை தேக்கி வைக்கும் தகுதி உடைய மேட்டூர் அணையின் மூலம் சேலம், ஈரோடு, நாமக்கல், திருச்சி, கரூர், தஞ்சாவூர், கடலூர், புதுக்கோட்டை உள்பட 11 மாவட்டங்களின் பாசனவசதி, குடிநீர்வசதி பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

பருவகாலங்களான ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் முடிய பெய்யும் மழை நீரை மேட்டூர் அணையில் தேக்கி வைத்து பயன்படுத்துவதால் தண்ணீர் அணையின் இரண்டு கரைகளையும் தொட்டு பரந்து விரிந்து கடல் போல் காட்சி அளிக்கும்.

விவசாய நிலமாக மாறியது

ஆனால் இந்த ஆண்டோ, மழை இன்றி மேட்டூர் அணை வறண்டு பாலைவனமாக காட்சி அளிக்கிறது. தண்ணீர் தேங்கி நின்ற இடங்களின் பல பகுதிகள் கரடு, பாறைகளாக காட்சி அளிக்கிறது. மேட்டூர் அணையின் நீர்தேக்க பகுதிகளான மாசிலாபாளையம், மூலக்காடு, சின்னமேட்டூர் உள்பட பல பகுதிகளில் தற்போது எள், சோளம் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன. எங்கு பார்த்தாலும் அவை பச்சை பசேல் என்று பசுமையாக காட்சி அளிக்கிறது. அதாவது தண்ணீரில் மூழ்கி இருந்த நீர்தேக்க பரப்புகள் எல்லாம் தண்ணீர் இல்லாத காரணத்தால் விவசாய நிலமாக மாறி வருகின்றன.

**கோபி அருகே புஞ்சைத்துறையம்பாளையத்தில் நள்ளிரவில் தோட்டத்துக்குள் நுழையும்**

**யானைகள் தீப்பந்தத்துடன் தூங்காமல் காவல் இருந்த விவசாயிகள்**

கோபி அருகே புஞ்சைத்துறையம்பாளையத்தில் நள்ளிரவில் விவசாய தோட்டத்துக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம் செய்கின்றன. அதை தடுக்க விடிய விடிய தீப்பந்தத்துடன் விவசாயிகள் காவல் காக்கின்றனர்.

வறண்டு கிடக்கும் வனப்பகுதி

கோபிசெட்டிபாளையம் அருகே டி.என்.பாளையம் வனச்சரத்துக்கு உள்பட்டது புஞ்சைத்துறையம்பாளையம், தேன்கல்கரடு, நவக்கிணறு மாதையன் கோவில் வனப்பகுதிகள். இந்த வனப்பகுதிகளில் யானைகள், காட்டு எருமைகள், மான்கள், கரடிகள், சிறுத்தைப்புலிகள் உள்ளிட்ட வனவிலங்குகள் வசித்து வருகின்றன.

தற்போது கோடை காலம் புஞ்சைத்துறையம்பாளையம் வனப்பகுதி முழுமையாக வறண்டுக் கிடக்கிறது. மேலும், இயற்கையாக அமைக்கப்பட்டு உள்ள தடுப்பணைகளில் தண்ணீர் வற்றிக் காணப்படுகிறது. எனவே, வனவிலங்குகளின் தாகத்தை தீர்ப்பதற்காக ரூ.5 லட்சம் செலவில் கட்டப்பட்ட செயற்கை வனக்குட்டையில் வனத்துறையினர் தண்ணீர் நிரப்பி வருகிறார்கள்.

யானைகள் அட்டகாசம்

வனப்பகுதியில் தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளதால் இரவு நேரங்களில் யானைகள் வனப்பகுதியை விட்டு அருகில் உள்ள விவசாய தோட்டங்களுக்குள் புகுந்து விடுகின்றன. புஞ்சைத்துறையம்பாளையம் பறையன் காட்டுத் தோட்டத்தை சேர்ந்தவர் முருகேசன். விவசாயி. இவர் அந்தப் பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறார்.

இதில், 2 ஏக்கர் பரப்பளவில் கரும்பும், வாழையும் சாகுபடி செய்து உள்ளார். கரும்பு பயிர்கள் தற்போது முதிர்ச்சி அடைந்து வெட்டும் நிலையில் உள்ளது. இரவு நேரங்களில் யானைகள் அட்டகாசம் செய்வதால் முருகேசன் மற்றும் பக்கத்து தோட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தினமும் இரவு காவல் காத்து வருகின்றனர்.

தோட்டத்திற்குள் புகுந்தது

இந்தநிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய 4 யானைகள் முருகேசன் தோட்டத்தில் சாகுபடி செய்து இருந்த கரும்புத் தோட்டத்துக்குள் புகுந்தது. அதைப் பார்த்ததும் முருகேசன் மற்றும் பக்கத்து தோட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் தீப்பந்தம் கொளுத்தியும், பட்டாசு வெடித்தும், வினோத சத்தம் எழுப்பியும் யானைகளை விரட்டினார்கள்.

தீப்பந்த வெளிச்சத்தையும், பட்டாசு சத்தத்தையும் கேட்டு மிரண்டு போன யானைகள் முருகேசன் தோட்டத்தை விட்டு வெளியேறி, அருகில் இருந்த அர்ஜூனன் என்பவர் சாகுபடி செய்து இருந்த மக்காச்சோளம் தோட்டத்துக்குள் புகுந்தன. அப்போது காவலுக்கு படுத்து இருந்த அர்ஜூனனின் மகன் மகேஷ்குமார், யானைகளை பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தார்.

தீப்பந்தம் கொளுத்தி...

பிறகு, தீப்பந்தம் கொளுத்தி யானைகளை விரட்ட முயன்றார். அதனால் ஆவேசம் அடைந்த ஒரு யானை மகேஷ்குமாரை விரட்டிக் கொண்டு வந்தது. அதைத்தொடர்ந்து மகேஷ்குமார் மற்றும் அக்கம்பக்கத்து தோட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் ஒன்று சேர்ந்து பட்டாசு வெடித்தும், வினோத சத்தம் எழுப்பியும் யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டி அடித்தனர்.

சுமார் ஒரு மணி நேர போராட்டத்துக்கு பிறகு அதிகாலை 5 மணியளவில் யானைகள் வனப்பகுதிக்குள் சென்றன. இந்த சம்பவத்தில் ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள வாழைகள் மற்றும் கரும்புகள் சேதம் அடைந்தன. வனப்பகுதியை ஒட்டியுள்ள விவசாய தோட்டத்துக்குள் யானைகள்

நுழைவதை தடுக்க அகழிகள் வெட்டப்பட்டு இருந்தும், அதை தாண்டிக் கொண்டு யானைகள் தோட்டத்துக்குள் புகுந்து விடுகின்றன.

விடிய விடிய காவல்

இதுகுறித்து அந்தப் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:–

வனப்பகுதியில் தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளதால், இரவு நேரங்களில் வனப்பகுதியை ஒட்டி யானைகள் வந்து விடுகின்றன. மேலும், வனக்குட்டையில் தண்ணீரை குடித்துக் கொண்டு, விவசாய தோட்டத்தை ஒட்டியே யானைகள் சுற்றித் திரிகின்றன. இருளத் தொடங்கியதும் தோட்டத்துக்குள் நுழைந்து விடுகின்றன.

யானைகளிடம் இருந்து பயிர்களை காப்பதற்காக டயர், விறகுகளை கொளுத்தி தீ வைத்தும், தீப்பந்தம் கொளுத்தியும் காவல் காக்க வேண்டி உள்ளது. வனத்துறையினர் சார்பில் உள்ள சோலார் பேட்டரிகள் பழுதடைந்து உள்ளதால் யானைகள் எளிதாக உள்ளே நுழைந்து விடுகின்றன. எனவே, விவசாய தோட்டத்துக்குள் யானைகள் நுழைவதை தடுக்க வனத்துறை அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**நிலமற்ற ஏழை விவசாயிக்கு அரசால் வழங்கப்பட்ட நிலத்தை அளந்து கொடுக்க, ஐகோர்ட்டு உத்தரவு**

திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுகா டி.எடையப்பட்டியை சேர்ந்தவர் பொன்னாத்தாள். இவர், மதுரை ஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறி இருப்பதாவது:–

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம் கடந்த 2006–ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 2007–ம் ஆண்டு டி.எடையப்பட்டி கிராமத்தில் எனக்கு ஒரு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இதற்கு, மணப்பாறை தாசில்தார் பட்டா வழங்கி உள்ளார். நானும், அந்த நிலத்துக்கு வரி செலுத்தி உள்ளேன். ஆனால், இதுவரை நிலத்தை அளந்து கொடுக்கவில்லை. இதனால் தனிநபர்கள் சிலர், அந்த இடத்தை ஆக்கிமிக்க முயற்சித்து வருகின்றனர். அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக, ஏழை மக்களுக்காக கொண்டு வரப்பட்டுள்ள திட்டம் பாழாகி வரும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு எனக்கு வழங்கிய நிலத்தை அளந்து கொடுக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதி கே.கே.சசிதரன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வக்கீல் ஏ.வடிவேல் ஆஜராகி வாதாடினார். மனுவை விசாரித்த நீதிபதி, வருகிற 28–ந் தேதிக்கு முன்னதாக மனுதாரருக்கு அரசால் வழங்கப்பட்ட நிலத்தை அளந்து கொடுக்க வேண்டும் என்று மணப்பாறை தாலுகா சர்வேயருக்கு உத்தரவிட்டார்.